# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசரியா, வில்சன் மேரி,ரூபெல்லா மேரி, ஜோஸ்பிட்டா மேரி, ஜெரின் மேரி, லில்லி புஷ்பம், மேரி மௌரிஸ், ஜூ லி எலிசபெத்- தஞ்சாவூர், ஜான்சி மேரி, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - கரூர், வித்யா மேரி, மரிய சூசை ரூபி- தூத்துக்குடி, ஜார்லத் புஷ்பா, அனன்சியா மேரி, பவுலின் மேரி, லூகாஸ் மேரி - கும்பகோணம், ஏதெல் பெர்க்கா, சகாயமேரி, லோரா மேரி, இரஞ்சிதம்

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், அனிருத் ஜோஸ்வா,ஜேடன், ஜான் ஜோசப், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, கிளாரா லூர்துமேரி, புஷ்பக்கண்ணு, மிக்கேல் சாமி - கோயமுத்தூர், சிப்ரியன்-தேனி, மேரி - இளையரசனேந்தல், ஜோஸ்பின் சகாய ராணி - கும்பகோணம், மார்கிரேட் பெல்சியா, அமல செல்வி, அற்புத சீலி, லீலாவதி, *இருதய விஜில்லா* - திண்டுக்கல், மரிய பிரகாசம் - தர்மபுரி, ஜோஸ்வா சந்தோஷ், கெர்மன், ததேயுஸ் கரோலின்- திருப்பூர், கரோலின் பிலவேந்திரன், ஜோசப் சக்கர் ஜாலி, நிர்மலா மேரி செல்வம், தென்னரசு, ரெபேக்கா - பெரம்பலூர்

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**திருமதி. அற்புமசீலி - திண்டுக்கல்**

**அருட்சகோதரி. அனன்சியா மேரி - கும்பகோணம்**

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. M. Antony Shaji OSM.





# கார்மல் அன்னை

## பதிப்பாசிரியர் பக்கம்





அன்னை மரியின் பக்தர்களே! ஆகட்டும் இதழின் வாசகர்களே! ஆகட்டும் இதழின் வாயிலாக மீண்டும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி! ஆகஸ்டு 15 ஆம் தேதி நாம் அன்னையின் விண்ணேற்பு பெருவிழாவை கொண்டாடுகிறோம், மேலும் இந்தியர்களாகிய நாம் நம் நாட்டின் சுதந்திர தின விழாவை கொண்டாடுகின்றோம்.

1950, சனவரி 26ம் தேதி, இந்திய அரசியலமைப்பு சட்டம் அமலுக்கு வந்தது. இந்தியா, குடியரசாக, உலகறியச் செய்த அதே 1950ம் ஆண்டு, நவம்பர் முதல் தேதி, திருத்தந்தை 12ம் பயஸ் அவர்கள், இறைவனின் அன்னையான மரியா, உடலோடும், ஆன்மாவோடும், விண்ணகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டார் என்ற மறைஉண்மையை, மறுக்கமுடியாத ஒரு கோட்பாடாக அறிவித்தார். **“பேரளவில் வாரிவழங்கும் கடவுள்”** என்ற சொற்களுடன், ஆரம்பமாகும் இந்த கோட்பாடே, திருஅவை வரலாற்றில், இன்றளவும், இறுதியாக வெளிவந்த கோட்பாடாக அமைந்துள்ளது.

மரியாவின் விண்ணேற்புத் திருவிழாவை, கிறிஸ்தவர்கள், 8 அல்லது 9ம் நூற்றாண்டிலிருந்தே கொண்டாடிவருகின்றனர். மரியாவை, அன்னையாக, கன்னியாக சிறப்பிக்க, ஆண்டுதோறும் பல விழாக்களைக் கொண்டாடுகிறோம். மரியன்னைக்கென நாம் கொண்டாடும் அனைத்து

## உள்ளே






| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| அன்னை மரியாளின் திருப்பயணம் | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| மரியாளின் பாடல் | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மாதா மன்றாட்டு மாலை | - 25 |
| பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் | - 28 |
| அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

திருநாள்களின் மகுடமாக அமைவது, இன்று, ஆகஸ்ட் 15ம் தேதி, நாம் கொண்டாடும் விண்ணேற்புப் பெருவிழா.
ஒவ்வொரு முறையும் மரியன்னையின் திருவிழாக்களை கொண்டாடும்போது, நம் உள்ளங்களில் சில கேள்விகள் எழும். மரியன்னைக்கு நாம் இன்று காட்டும் மரியாதை, புகழ், வணக்கம் எல்லாம், நாசரேத்து கிராமத்தைச் சேர்ந்த இளம்பெண் மரியாவுக்கு கிடைத்தனவா? மரியா வாழ்ந்த காலத்தில் எதிர்கொண்ட கொடுமைகளை மறந்துவிட்டு, மறுத்துவிட்டு, அல்லது மறைத்துவிட்டு, மரியன்னையை, பீடங்களிலும், கோபுரங்களிலும் ஏற்றிவைக்கும் நம் பக்தியை அவர் விரும்புவாரா? அல்லது, அவரின் உயர்வுக்கு காரணமாய் இருந்த அவர் வாழ்வுப் பாடங்களை நாம் செயலாக்குவது அவருக்கு அதிகம் பிடிக்குமா? இவை நம் உள்ளங்களில் எழும் சில சங்கடமானக் கேள்விகள்.
மரியா கண்டுவந்த கனவெல்லாம் ஒன்றுதான் உரோமையர்களின் அடிமைதளையிலிருந்து விடுதலை பெறவேண்டும். ஒரு நாட்டை, வேற்றுநாட்டவர் ஆக்ரமிக்கும்போது, அங்கு கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைகள் ஏராளம். உரோமைய வீரர்களின் அட்டகாசங்கள், அத்துமீறல்கள், பாலியல் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டேயிருந்தது. விடுதலைக்கான மரியாவின் வேண்டுதல் கேட்கப்பட்டது. அவர் ஏங்கிய விடுதலை வந்தது. ஆனால், எப்படி வந்தது? ஒரு பெரும் இடியென வந்திறங்கியது.
“உனக்கும், உன் மக்களுக்கும் விடுதலை வழங்க, என் மகனை அனுப்புகிறேன். ஆனால், என் மகனுக்கு நீ தாயாகவேண்டும்’ என்று இறைவன் அனுப்பிய செய்தியைக் கேட்டு, மரியா, ஆடிப்பாடியிருக்கமாட்டார், நிலைகுலைந்து, நொறுங்கிப்போயிருப்பார். இறைவனின் விடுதலைச்செய்தி, மரணதண்டனைக்கு இட்டுச்செல்லும் ஓர் அழைப்பாக இருந்தது. ஆனால், மரியா **‘ஆம்’** என்று சம்மதம் சொன்னார்.
மரியாள், கொண்டிருந்த ஆழமான, அசைக்கமுடியாத இறைநம்பிக்கை, அவர் தந்த முதல் சம்மதத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை, அவர் சந்தித்த ஒவ்வொரு நிகழ்விலும், மீண்டும், மீண்டும் தீயிலிடப்பட்டு, அவரது சம்மதத்தால், தூய்மையாக மிளிர்ந்தது.
கருவுற்ற தருணம் முதல் தன் வாழ்நாள் முழுவதும் பல சவால்களை சந்தித்தார். ஆனால் ஒருபோதும் அன்னையின் நம்பிக்கை குறையவில்லை. அந்த நம்பிக்கை, அந்த வீரம், அன்னையின் உடலோடு, பூமிக்குள் புதைந்துவிடக் கூடாதென்றுதான், மரியாள் இறந்ததும், அவரை, உடலோடும், ஆன்மாவோடும், இறைவன் விண்ணகத்தில் ஏற்றுக்கொண்டார். அந்த அற்புதத்தைத்தான், இம்மாதம் அன்னை மரியாவின் விண்ணேற்புப் பெருவிழாவாகக் கொண்டாடுகிறோம்.
பீடங்களில் ஏற்றி, புகழ் மாலை பாடி, திருநாட்கள் கொண்டாடி, அன்னை மரியாவைப் பெருமைப்படுத்துவது, ஒரு புறம் இருந்தாலும், அவரைப்போல், பல வழிகளிலும், சவால்களை சந்தித்துவரும், கோடான கோடி அன்னையருக்கு, அன்னை மரியாவோடு நாமும் சேர்ந்து, உறுதுணையாக இருப்போம்.





4. மோஷாகா- தர்காஸ்

மார்ச் மாதம் ஒன்றாம் தேதி அன்று இங்கு முதல் சனிக்கிழமை நவநாள் நடைபெற்றது. எங்கள் ஊரில் இருந்து எப்பொழுதும் ஆட்டோவில் வருவோம். ஆனால் இந்த மாதம் நான் வரவில்லை என்று சொல்லிவிட்டேன். நான் வேலை செய்த பொழுது தேன் குழவிகள் என்னை கைகளில் கொட்டிவிட்டது. எனக்கு கொஞ்சம் சுயநினைவு இருந்ததால், அப்படியே நடந்து மருத்துவமனைக்கு சென்று விட்டேன். என் தாயாரும் என் பின்னே ஓடி வந்தார்கள். மருத்துவர்கள் எனக்கு ஊசி போட்டார்கள், எனக்கு மாரடைப்பு வந்து அங்கு மயங்கி விட்டேன். கீழே விழுந்ததால் காலும் பிராக்சராகிவிட்டது. ஒரு மாதமாக படுத்த படுக்கையாகிவிட்டேன். அப்பொழுது தவக்காலம் எங்கள் பங்கில் ஒரு ஜெபம் அனைவருக்கும் கொடுக்கப்பட்டது, அதை படுத்துகொண்டே ஜெபித்தேன், மேலும் ஜீவ மாதாவிடம ஜெபித்தேன். அன்னை மரியாள் என்னை முழுமையாக குணப்படுத்தினார். இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

5. ஜாக்குலின்- தஞ்சாவூர்

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக எனது கணவர் இறந்துவிட்டார், ஆதலால் வீட்டு நிலமை சரியாக இல்லை, எப்படி வேலைக்கிடைக்கும் என்று எதுவும் தெரியவில்லை. பின்பு ஒரு ஹோட்டல் வைத்து காலை 6 மணி முதல் இரவு 12 மணி வரை வேலை செய்தேன். அதன் பின்பு ஒரு ஆண் மற்றும் பெண்பிள்ளை இருவரையும் நன்றாக படிக்க வைத்தேன். பெண்பிள்ளை ஐடி கம்பெனியில் வேலை செய்கிறாா், மகனும் வேலை செய்கிறான். இயேசுவுக்கு நன்றி! மரியே வாழ்க!

### குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியா் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.
வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.
உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிா்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.
1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே
தந்தைக்கும் மகனுக்கும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்பணி. லீபன் டேவிட் மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

ஜூலை மாதம் 2 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். வந்திருந்த அனைத்து இறைமக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**1. ராதிகா- பெங்களூர்**

நான் ஒரு இந்து சகோதரி திருமணமாகி சில ஆண்டுகளாக எனக்கு குழந்தை இல்லை. என்னுடைய நண்பராகிய ஒரு ஆசிரியர் இந்த ஆலயத்தை பற்றி சொன்னார்கள், அவர்கள் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள். ஜீவ மாதாவிடம் நான் ஜெபித்தேன். ஜீவ மாதாவின் அருளால் நான் கருவுற்று ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுத்தேன். இயேசுவுக்கு நன்றி! மரியே வாழ்க!

**2. மேரி சோழிங்கநல்லூர்**

எனது அக்காவின் கணவருக்கு 60 வயது ஆகிறது, அவருக்கு காலில் அடிபட்டிருந்தது, அது அவருக்கு தெரியவில்லை, ஆனால் இரத்தம் வந்தது. என்னவென்று பார்த்தபோது சர்க்கரை வியாதி இருப்பதால் இரத்தம் வந்திருக்கிறது. அதன் பின்பு ஒரு நாள் அவர் குளித்து கொண்டிருக்கும்போது விழுந்துவிட்டார், அவரால் நடக்க முடியவில்லை படுத்த படுக்கையாகிவிட்டடார். மருத்துவமனைக்கு கூட்டி சென்றபோது, மூன்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றார்கள். ஜீவ மாதாவிடம் தன் அன்பு மகனுக்காக பரிந்து பேசுமாறு வேண்டி கொண்டோம். அறுவை சிகிச்சை செய்வதற்கு கூட்டி சென்றபொழுது ஜீவ மாதாவின் படத்தை ஜெபித்து அந்த படுக்கையோடு வைத்துவிட்டேன். இப்பொழுது அவர் முழுமையாக குணமைடைந்து, நன்றாக நடக்கிறார். இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**3. மணிகண்டன்- சோழிங்கநல்லூர்**

நூன் பத்து ஆண்டுகளாக இந்த ஆலயத்திலே தான் இருக்கிறேன், நாங்கள் எல்லா நாளும் வந்து ஜெபிப்போம். கடந்த 50 நாட்களாக எனக்கு பண பிரச்சினை இருந்தது. நான் ஊரில் இல்லை, நாங்கள் செய்து கொண்டிருந்த தொழிலில் கூட்டு உறுப்பினர் மூலமாக பிரச்சனை வந்தது. நான் இங்கு இல்லாததால் என் மனைவி இந்த பிரச்சனைக்குள் மாட்டிக்கொண்டார். இந்த பிரச்சனையிலிருந்து விடுதலை தருமாறு ஜீவ மாதாவிடம் வேண்டிக்கொண்டேன். ஜீவ மாதா எனக்கு விடுதலை கொடுத்தார். இயேசுவுக்கு நன்றி! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஓர் காட்டின் ஓரத்தில் ஒரு சிறிய கிராமம் இருநதது. கிராமத்தைச் சுற்றியுள்ள காட்டில் கொடிய காட்டு விலங்குகள் இருந்தன. அதனால் கிராம மக்கள் சிறுவயதிலேயே மரம் ஏறும் பயிற்சி பெற்றார்கள். காட்டு விலங்குகள் துரத்தும்போது மரங்களில் ஏறுவதன் மூலம் தங்கள் உயிரைக் காப்பாற்றிகொள்ள முடியும். அந்த கிராமத்தில் வசித்து வந்த ஒரு முதியவர் மரம் ஏறுவதில் நிபுணராக இருந்தார். மேலும் இளம்குழந்தைகளுக்கு அவர்தான் பயிற்சி அளித்தார். பயிற்சியின் கடைசி நாள் அன்று, இறுதி சோதனைக்காக முதியவர் மாணவர்களை உயரமான, மென்மையான மற்றும் ஏற மிகவும் கடினமான ஒரு மரத்திற்கு அழைத்துச் செல்வது வழக்கம். அதன்படி அழைத்துச்சென்றார். முதியவர் அவர்களிடம், "இன்று உங்கள் பயிற்சியின் கடைசி நாள். நீங்கள் மரம் ஏறுவதில் திறமையானவரா என்று பார்க்க விரும்புகிறேன். அதனால்தான் இன்று நான் உங்களை இந்த மரத்தில் ஏறும்படி சவால் விடுகிறேன், இந்த மரத்தில் ஏறுவதில் வெற்றி பெறுபவர்கள், உலகின் எந்த மரத்திலும் எளிதாக ஏறலாம்." மாணவர்கள் மரத்தில் ஏற வரிசையில் நின்றனர். முதல் இளைஞர் மரத்தில் ஏறத் தொடங்கியபோது, அவர் அதை மிக எளிதாக ஏற முடிந்தது, பின்னர் கீழே வரத் தொடங்கினார். பாதி தூரம் இறங்கிக் கொண்டிருக்கும்போது, ஜாக்கிரதை.. மெதுவாக இறங்கு.. அவசரம் இல்லை.. என்று முதியவர் கத்தினார். இளைஞனும் அவ்வாறே செய்து மெதுவாகவும் கவனமாகவும் கீழே இறங்கினான்.

அதன் பிறகு எல்லா இளைஞர்களும் ஒரு வழியாக மரத்தில் ஏறத் தொடங்கினர். ஒவ்வொரு முறையும், இளைஞர்கள் மரத்தில் ஏறுவார்கள், முதியவர் எதுவும் சொல்ல மாட்டார், ஆனால் அவர்கள் பாதி கீழே இறங்கும்போது அல்லது கிட்டத்தட்ட கீழே அடையும் போது, நிதானமாகவும் மெதுவாகவும் இறங்கு, கவனமாக இறங்கு, எந்த அவசரமும் இல்லை என்று கூறுவார். முதியவர் அறிவுறுத்தலைப் பின்பற்றி முழு குழுவும் மரத்தில் ஏறுவதில் வெற்றி பெற்றனர். அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு, ஒரு இளைஞன் முதியவரிடம் சென்று, பாபா, மரத்திலிருந்து இறங்கும்போது மட்டும் கவனமாக இருக்கச் சொன்னீர்கள், ஆனால் அந்த மரத்தின் உச்சியில் ஏறுவதுதான் மிகவும் கடின், ஆனால் ஏறும்போது கவனமாக இருக்கச் சொல்லவில்லை, ஆனால் நாங்கள் மரத்திலிருந்து பாதி தூரம் அல்லது அதற்கும் குறைவாக இறங்கும்போது எங்களை கவனமாக இருக்கச் சொன்னீர்கள். ஏன்? பாருங்க, மரத்தின் உச்சிக் கிளையில் ஏறுவது ரொம்ப கஷ்டம். எனக்கும் உங்களுக்கும் இது தெரியும். அதனால்தான் நான் சொல்லாமலேயே நீங்க விழிப்புடன் இருந்தீங்க. வேலையின் ஆரம்பத்தில், எல்லோரும் எச்சரிக்கையுடன் முன்னேறுவார்கள். ஆனால், நாம் சேருமிடத்திற்கு அருகில் இருக்கும்போது விழிப்புணர்வின்மையும் எச்சரிக்கையும் குறையும். பிறகு, நம் வேலை முடியப் போகிறது என்று உணர ஆரம்பிக்கிறோம். சேருமிடம் வெகு தொலைவில் இல்லை என்று, அங்கே நம் கவனம் சிதறி, தவறுகள் செய்கிறோம். எனவே, சேருமிடத்தை நெருங்குவதற்கும், உண்மையில் சேருமிடத்தை அடைவதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.'என்றார்.

அண்னை மரியாள் ஒருபோதும் கவனத்தை சிதறவிட்டதில்லை. "ஆம்" என்று சொல்லி இறைவனின் அழைப்பை ஏற்ற நாள் முதல், மரியாளிள் விண்ணேற்பு வரை சீரிய கவனத்தோடு வாழ்ந்தார். ஆகவேதான் ஒவ்வொரு நொடிப்பொழுதும் தூய்மையானவராக, கறைபடியாதவராக வாழ்ந்தார். அதனால் இறைவன் அவரை விண்ணக மண்ணக அரசியாக உயர்த்தினார். அண்னையைப்போன்று கவனத்தை சிதறவிட்டாமல், கறைபடியாத மனிதனாக வாழ முயலுவோம்.

# அன்னை மரியாவின் திருபயணங்கள்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
சேர்வைட் தலைமையகம், சென்னை.

### முதல் பயணம்

**தொடக்கவுரை**

நமதாண்டவர் இயேசு கிறிஸ்து பிறந்த 2025 ஆம் ஆண்டினை மாபெரும் ஜூபிலியாக மகிழ்வுடன் கொண்டாட திருஅவை தனது மக்களுக்கு அழைப்பு விடுத்துக் கொண்டு இருக்கின்றது. எதிர்நோக்கும் திருப்பயணிகள் ஆண்டு, நம்பிக்கை ஆண்டு என்று நாமும் பல வகைகளில் நம்மைத் தயாரித்து வருகின்றோம். உலகளாவிய சகோதரத்துவம், ஏழைகளோடு தோழமை உறவு, திருமுழுக்குப் பெற்ற அனைத்து கிறிஸ்தவர்களுடனும் நல்லுறவு மற்றும் இயற்கையைப் பராமரித்துப் பேணுதல் என்ற நான்கு வகை ஒன்றிப்பு-உறவுகளை உள்ளடக்கியதாக 2025 ஆம் ஜூபிலி ஆண்டு நம்முன் வைக்கப்படுகிறது. இத்தகைய பரிமாணங்களை சிறப்பாக வாழும் போதுதான் ஜூபிலி தரும் அருள் வரங்களைப் பெற முடியும் என்று மறைந்த திருத்தத்தை பிரான்சிஸ் கூறியுள்ளார். இவ்வாண்டில் நாம் புனித பயணங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் திருஅவை நம்மை பணிக்கின்றது. எனவே புனித திருத்தலங்களை நோக்கி கத்தோலிக்க மக்கள் திரள் திரளாகச் செல்கின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமதன்னை பரிசுத்த கன்னி மரியாவும் பல பயணங்களை மேற்கொண்டுள்ளார். அவர் கலிலேயா நாட்டிலிருந்து யூதேய நாட்டிற்குச் சென்றதை அவரின் முதல் பயணமாக எடுத்துக் கொள்ளலாம். இப்பயணத்தின் சிறப்பை, நோக்கத்தை, விளைவுகளை இக்கட்டுரையில் ஆராய்வோம். இதன் பயனாக நாம் பெறும் நற்சிந்தனைகளை வாழ்வாக்குவோம். அன்னையின் மீது உண்மையான பக்தியை வளர்த்துக் கொள்வோம். மரியா நம்மிடம் கூறுவது: ‘அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” என்பதாகும். இக்கூற்றை முழுமையாக வாழ்வதுதான் அன்னைமீது கிறிஸ்தவர் காட்டும் முழுமையான அன்பாகும். எனவே இயேசுவை, அவரது நற்செய்தியை, இறையாட்சியின் விழுமியங்களை நம் வாழ்வில் முன்னிலைப்படுத்த அழைக்கும் நமது அன்னையின் அன்புக் குரலுக்கு செவிமடுப்போம். அன்னை மேற்கொண்ட முதல் பயணம் இத்தகைய வாழ்விற்கே நம்மை அழைக்கின்றது.

**கலிலேயாவிலிருந்து யூதேய நாட்டிற்குப் பயணம்**

இயேசு பிறப்பின் முன்னறிவிப்பை பெற்றபின் மரியாவின் நீண்ட பயணம் உதயமாகின்றது. இப்பயணம் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் சிற்றூரிலிருந்து தொடங்கி யூதேய நாட்டிலுள்ள கரீம் என்னும் ஊரில் நிறைவடைகின்றது. கலிலேயா வளமான பகுதிகளையும் பெயர்பெற்ற கடற்கரைகளையும் கொண்டு விளங்கியது. இயேசு இங்குள்ள கடல்மீது நடந்தார். பெரும்புயலை அடக்கினார். ஐயாயிரம் மக்களுக்கு அப்பம் வழங்கி அவர்களின் பசியைப் போக்கினார். கலிலேயாவிலுள்ள நாசரேத்து எனும் ஊர் மரியா பிறந்து வளர்ந்த இடம். வானதூதரை சந்தித்த இடம். இயேசுவின் குழந்தைப் பருவமும் இங்குதான் வாழப்பட்டது. யூதேய நாடு மலைகள் சூழ்ந்தது, சற்று உயரமானது. நாசரேத்திலிருந்து நூறு மைல்





பூச்சிக்கொள்ளி மருந்துகளை உபயோகபடுத்துகிறோம். நெகிழி (பிளாஸ்டிக்) பயண்பாட்டில் உற்ப்பத்தியை மிகுதிப்படுத்தி குப்பைகளை மலைபோல் குவித்து வருகிறோம் எனவே மண் வளம் காணாமல் போகிறது. குழந்தை வளமும் அரிதாக இருக்கிறது. புனித சிரில் தமது இல்லத்திலிருந்து ஒலிவ மலை அழகைப் பார்த்து இந்த கற்பனைத் தன்மையில் மண் வளத்தின் அழகை விளக்குகிறார்.

**அன்னை மரியாவின் கன்னிமை அழகு**

அன்னை மரியாவின் கன்னிமை அழகை மண் வளத்தோடு ஒப்புமை படுத்தியவர் ஒரு படி மேலே சென்று அன்னை மரியாவின் அழியாத கன்னிமை தன்மையயை மக்களின் அன்றாட வாழ்விலிருந்து பிரித்து தெளிவுபடுத்துகிறார். குடுப்ப வாழ்வில் ஒரு பெண் குழந்தை பெற தன் கணவரோடு சேர்ந்து வாழ வேண்டும் அவ்வாறு சேர்ந்து வாழ்கின்ற போது பெண்கள் தங்கள் கன்னிமை தன்மையினை இழக்கின்றார்கள். அப்படி இழக்கின்ற போது வலி ஏற்படும் என்றும் வலியால் குரலெழுப்பி துடிப்பார்கள் என்றும் லேவியர் புத்தகம் 12-ம் இயல் கூறுகிறது. குழந்தை பெற்ற தாய் குழந்தை ஆணாக இருப்பினும், பெண்ணாக இருப்பினும் ஓராண்டாக தூய்மை அடையும் காலத்தைப் பின்பற்ற வேண்டும் என்ற கருத்தையும் அதே புத்தகம் விவரிக்கிறது. இந்த கருத்துகளை அன்னை மரியாவின் வாழ்வியலோடு தொடர்புபடுத்தி அன்னை மரியா தனது கன்னிமையை இழக்க எந்தவிதமான சப்தமோ இரைச்சலோ அல்லது வலியினால் ஒலியோ எழுப்பவில்லை எனவே அன்னை மரியாவின் கன்னிமை என்றும் அழகானது என்றுகூறி அதில் பழுதில்லை என திறனோடு உறுதிபடுத்துகிறார். அந்த அழகை ஆண்டவர் இயேசுவின் பிறப்போடு இணைத்து அழகான கன்னிமையின் வழியாகப் பிறந்த இறைமகன் இயேசுவும் அழகானவர் என்று கூறுகிறார்.

**வாக்கு மனிதரானார்**

ஏசாயா 7:14 இறைவார்த்தை இயேசுவின் பிறப்பை நேரடியாக எடுத்துக்கூறும் பழைய ஏற்பாட்டு இறைவார்த்தையாகும். புனித சிரில் இந்த இறைவார்த்தையின் பின்புலத்தை அறிந்தவராக பின்வருமாறு கூறுகிறார். “ஏசாயா 7:14 இறைவார்த்தை நம்பிக்கை கொள்ள இயலாத மக்களுக்காகத் அருளப்பட்ட வார்த்தை” என்று ஆணித்தரமாக் கூறுகிறார். எனவே இந்த ஏசாயா 7:14 ( …இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார்…) இறைவாாத்தையை நம்பிக்கையாளர்கள் கையாளும் போது அதை யோவான் நற்செய்தி 1:14 ( .. வாக்கு மனிதர் ஆனார்: நம்மிடையே குடிகொண்டார். )இறைவார்த்தையோடு ஒப்பிட்டு படிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஏசாயா 7:14 இறைவார்த்தையை யோவான் 1:14 –ம் இறைவார்த்தையோடு பொருத்திப் பார்க்கிறார். அதற்கு பல இறைவார்த்தைகளை காரணங்களாக கூறினாலும் யோவான் 1:13 அவர்கள் இரத்தத்தினாலோ உடல் இச்சையினாலோ ஆண்மகன் விருப்பத்தினாலோ பிறந்தவர்கள் அல்லர்) என்ற இறைவார்த்தையையே மிகச்சிறந்த காரணமாகக் கூறுகிறார். ஒருவர் நம்பிக்கையில் ஆழப்பட எசாயா 7:14 படிக்க வேண்டும் அதன் பொருளை புரிந்துகொள்ள யோவான் 1:14 படிக்க வேண்டும். இந்த இரண்டு இறைவார்த்தைகளையும் இணைக்கின்ற இணைப்பு வார்த்தையாக யோவான் 1:13 இறைவார்த்தையை படிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச
தஞ்சாவூர்

22



சென்ற மாத இதழில் புனித சிரில் அன்னை மரியாவைக் கடவுளின் தாங்கியவர் என்ற தலைப்பை வலியுறுத்திக் கூற அவர் மேற்கொண்ட பல்வேறு முயற்ச்சிகளையும் அவர்பட்ட வேதனைகளையும் பற்றி பார்த்தோம். இந்த மாத இதழில் மரியாவைப் பற்றி எசாயா 7:14 இறைவார்த்தையின் அடிப்படையில் அவர் கூறும் கருத்துகளைப் பற்றி பார்ப்போம்.

**அன்னை மரியாவின் கன்னிமைத் தன்மை**

அன்னை மரியாவின் கன்னிமைத் தன்மையைப் பற்றி அனைத்துப் புனிதர்களும் பெருமைபட எடுத்துரைக்கின்றார்கள். அந்த வரிசையில் இப்புனிதரும் தன்னுடைய முறைமைக்கு ஏற்றப்படி ஒரு படி மேலே சென்று அன்னை மரியாவின் கன்னிமை அழகை பெரிதுபடுத்தி விவரிக்கிறார். கன்னிமைத் தன்மையினை கடவுள் தருகின்ள கொடையாக ஏற்றுக்கொண்டு அழகுபடுத்துகிறார். ஏசாயா 7:14 இறைவார்த்யையில் காணப்படும் இளம்பெண்னை கன்னிப்பெண்ணாகப் பார்த்து அந்த கன்னிப் பெண் அன்னை மரியாவாகத்தான் இருக்க முடியும் என்று மீண்டும் மீண்டும் தமது 12-ம் சொற்பொழிவில் வலியுறுத்துகிறார். ஏசாயா 7:14 ல் காணப்படும் இளம்பெண்னை தூய பவுலடியார் கலாத்தியர் 4:4-ல் கூறும் பெண்ணாக ஏற்றுக்கொள்கிறார். திருப்பாடல்கள் 22:9-ல் காணப்படும் தாய்மைக்கு அழைத்துச் செல்வதாக தமது கற்பனையில் கூறுகிறார்.

**எருசலேமின் அழகு**

மண் என்பதற்கு பல அர்த்தங்கள் இருந்தாலும் இவர் அழகு என்றச் சொல்லிலே பயன்படுத்துகிறார். உயிர்கள் வாழ அத்தியாவசயான பொருளாக அல்லது இடமாக அமைகிறது. இறைவார்த்தையில் ஏறக்குறைய 652 முறை 'மண்' என்றச் சொல் வருவதைப் பார்க்கும்போது மண்ணின் பெருமையை உணரமுடிகிறது. இயேசுவும் இயேசுவின் தாய் அன்னை மரியாவும் பிறந்த மண்ணில் இவரும் பிறந்ததால் அந்த மண்ணிற்கு பெருமை சேர்க்கும் விதமாக இவர் தமது மண்ணின் பெருமையைப் பற்றி பேசுகிறார். மரங்களும் பூச்சிகளும் வாழ 'மண்' எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது இந்த மண்ணில் மனிதனும் வாழ. எனவேதான் என்னவோ அக்காலத்திலேயே புனித சிரில் இயேசுவும் அன்னை மரியாவும் யோசேப்பும் வாழ்ந்த திருக்குடும்பத்ததின் அழகை விவரிக்கிறார். அந்த அழகை அன்னை மரியாவின் அழகோடு ஒப்பிடுகிறார். பிறகு அன்னை மரியாவின் கன்னிமை தன்மையின் அழகோடு ஒப்பிடுகிறார்.

இக்காலச் சூழலில் மண்வளத்தை பாதுகாக்க எல்லோருமே தவறிவருகிறோம். விவசாய பணியில் அளவிற்கு அதிகமாக





தூரத்தில் அமைந்திருந்தது சக்கரியா-எலிசபெத்து இல்லம். நாசரேத்தின் அமைதியில், மகிழ்வில் திளைத்திருந்தபோது மெசியாவின் பிறப்பு மங்களச் செய்தியாக மரியாவுக்கு வானதூதரால் அருளப்பட்டது. இயேசுவின் பிறப்போடு தனது உறவினரான எலிசபெத்தும் முதிர்ந்த வயதில் ஒரு மகனைப் பெறுவார் அவருக்கு இது ஆறாம் மாதம் என்று கேள்விப்பட்டதும் மரியா துணிவோடு, விரைவாக தனது பயணத்தை மேற்கொள்கிறார். ஆண்டவராம் இயேசுவின் தாயாகும் பேற்றினை, இறைவன் தனக்கு அளித்திருக்கும் மாபெரும் மகிழ்வுச் செய்தியைப் பரிமாற வேண்டும். இரண்டாவதாக தனது உறவினருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற தீர்மானத்துடன் பயணத்தைத் தொடங்குகிறார். நீண்டபயணம், மலைகளில் ஏறி இறங்கி நடக்க வேண்டும், திருடர்கள் பயம் இவை அனைத்தையும் பொருட்படுத்தாமல் தனது உதரத்தில் இருக்கும் மீட்பரில் நம்பிக்கை வைத்து தன் பயணத்தை ஆரம்பிக்கிறார் அன்னை மரியா. விவிலிய அறிஞர்கள் கூறுகின்றனர்: மரியா இப்பயணத்தை தனியாக மேற்கொண்டிருக்க முடியாது. அவர் எருசலேம் செல்லும் திருப்பயணிகளோடு சேர்ந்து பயணித்திருக்கலாம். புனித வளனார் கூட பாதுகாப்பு கருதி உடன் பயணித்திருக்கலாம். மரியாவின் துணிவு இங்கு போற்றப்படுகிறது. தனது பெருமை, உயர்வை பொருட்படுத்தாது தேவையில் இருப்போருக்கு உதவிக்கரம் நீட்டுவது நமக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கின்றது. நமது பயணத்தின் பாதைகளில் நெருக்கடிகள் நிறைந்திருந்தாலும் மரியாவும் அவர் தன் மகனும் நம்முடன் பயணிக்கிறார் என்ற நினைவில் நாம் என்றும் நிலைத்திருப்போம்.

'இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர், அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார்" (லூக்1:31-32) என்று வானதூதர், கடவுளிடமிருந்து தான் பெற்ற செய்தியை அறிவிக்க, மரியா தனது நியாயமான கேள்வியைத் தொடுக்க, தகுந்த பதிலும் கிடைக்க, 'நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று தன்னைத் தாழ்த்தினார். இறைவன் மனுவாய் கன்னியின் வயிற்றில் உருவானார். இறைவனை சுமந்து கொண்டு முதல் நற்கருணைப் பேழை, கலிலேயா நாட்டிலிருந்து யூதேயா மலை நாட்டிற்குப் பயணித்தது. வழி நெடுகும் இறை ஆசிர் பெற்றது என்றால் மிகையாகாது.

தாய்மையை அடையும் பெண்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவர்களின் உள்ளத்திலும், உடலிலும் அழகும், பொலிவும், மகிழ்வும் ததும்ப குடும்பமே தெய்வத்திற்கு நன்றி கூறி கோவில், குளம் என்று தரிசிப்பர். மரியா ஒரு சாதாரண பெண்மணி தான். ஆனால் இறைவனின் தாய் இறைமகனை சுமந்து செல்கிறார். தூய ஆவியாரின் வல்லமையின் நிழலில் தனது உறவினர் எலிசபெத்துவின் வீட்டை நோக்கிப் பயணிக்கின்றார். இஸ்ரயேல் மக்களின் நம்பிக்கையைப் புதுபித்தவாறு மலைகளில் உறையும் இறைவனின் பேராற்றலையும், அழகையும், பிரசன்னத்தையும் அனுபவித்தவாறு அவரது பயணம் தொடர்கின்றது. யூத இனத்தவர் திருயாத்திரைக்குப் பெயர் போனவர்கள். முக்கியமான விழாக்களுக்கு எருசலேம் நோக்கி திருப்பாடல்களைப் பாடியும் செபித்தும் செல்வார்கள். உயரமான மலைக்குச் செல்வது அவர்களின் இதயத்தை இறைவன்பால் எழுப்பியது. அவரது இல்லத்தில் வாழ்வது வேறெங்கும் வாழ்வதை விட மேலானது என்ற இறை அனுபவம் பெறுவதாக இருந்தது. நெடுந்தூரம் பயணிக்க முடியாதவர்கள் திருக்கோவில் அமைந்துள்ள திசையை நோக்கி செபிக்கும் பழக்கமும் அவர்களிடையே இருந்தது. இறைவனை தரிசிக்க மாசற்றவர்களாக,

தங்களைத் தயாரித்து உருவாக்கினர். உணர்ச்சிப் பூர்வமாக அவர்கள் திருப்பாடல்கள் 120 முதல் 134 வரை பாடிச் செல்வார்கள். ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம் என்ற அழைப்பை நான் கேட்டபோது அகமகிழ்ந்தேன். எருசலேமே, இதோ, நாங்கள் அடியெடுத்து வைத்து உன் t hapy;fspy; epwf;fpd;Nwhk;” (தி.பா. 122:1-2) என்ற திருப்பாடலின் வரிகள் நம்மையே உருக வைக்கின்றன. ‘எருசலேமைச் சுற்றிலும் மலைகள் இருப்பது போல ஆண்டவர் இப்போதும் எப்போதும் தம் மக்களை சுற்றிலும் இருப்பார்” என்ற திருப்பாடலின் பொருளுடன் தம்மை நெருக்கமாக இணைத்துக் கொள்வார்கள் (தி.பா. 125:2). இதே மனநிலையுடன் மரியாவும் எருசலேமுக்கு மிக அருகில் இருந்த எலிசபெத்தின் இல்லம் ஏகினார்.

**மரியாவின் மகிழ்ச்சி நிறை திருப்பயணம்**

மரியா-எலிசபெத் சந்திப்பை நற்செய்தியாளர் லூக்கா மிக அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். மீட்பின் செய்தியை பகிர்ந்து கொள்ளவும் தேவையில் இருப்போருக்கு உதவி செய்யும் ஆர்வமுடன் எழுந்த மரியாவை விரைந்து சென்றார் என்று அழுத்தம் தருகிறார். இரண்டாவதாக மரியா செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்துகிறார். அந்த வாழ்த்தைக் கேட்டதும் திருமுழுக்கு யோவான் மகிழ்ச்சியால் துள்ளுகிறார். குழந்தையின் தாயும் தூய ஆவியாரால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டனர். இத்தகைய பரிமாற்றம், உருமாற்றம், ஆனந்தம் அனைத்தும் மரியாவின் கருவில் உருவான மீட்பரின் அதிசயங்கள். மரியா சென்றவிடமெல்லாம் தூய ஆவியாரின் வல்லமையும் ஆற்றலும் நிழலாடியது. நாமும் இத்தகைய ஒப்பற்ற நிகழ்வை அறிவால் அல்ல இதயத்தில் எழும் உள்ளுணர்வால் தான் உணர முடியும். நமது சந்திப்புகள், உறவுகள் எவ்வாறு அமைகின்றன? பிறருக்கு எப்போதும் அமைதியையும் மகிழ்வையும் கொண்டு வருபவர்களாக இருக்கின்றோமா என்பதை சற்று சிந்திப்போம்.

மூன்றாவதாக, எலிசபெத்து நம் அன்னையை வாழ்த்துகிறார். அந்த வாழ்த்து ஒவ்வொரு அருள்நிறை மன்றாட்டிலும் உலகம் முழுவதும் ஓங்கி ஒலிக்கிறது. அவர் பெண்களுள் ஆசீர் பெற்றவர் உலக மாந்தருள் அனைவரையும்விட அருள் நிறைந்தவர் மூவொரு இறைவன் உறையும் திருக்கோவில். உலகின் பாவம் போக்கும் செம்மறியைச் சுமந்து சென்ற முதல் நற்கருணை பேழை. ஒவ்வொரு ஆலயத்திலும் நடுநாயகமாக வீற்றிருக்கும் நற்கருணை நாதர் முன் மண்டியிட என்னே அற்புதங்கள், அதிசயங்கள் மானிடர் இதயங்களில் நிகழ்கின்றன. எல்லையில்லா அன்பும் கருணைக்கடலான கடவுளின் பிரசன்னமும், உலகம் தர முடியாத அமைதியும் பொங்கிப் பாயும் அந்த நற்கருணையின் அனுபவம் எலிசபெத் வீட்டிலும் உணரப்படுகிறது. ஒவ்வொரு நாளும் நாம் நற்கருணையை உட்கொள்கிறோம். இயேசுவின் ஆளுமையில் நாளும் வளர்கின்றோமா? நாம் பெற்ற அனுபவத்தை நமது சகோதர சகோதரிகளோடு பகிர்ந்து கொள்கிறோமா? வாழ்வது நான் அல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார் என்று நான் சாட்சி பகர முடிகிறதா?

**மரியாவின் பாடல்**

தன்னை ஆண்டவரின் தாயாகவும் இறைவார்த்தையை முழுவதும் நம்பும் இறைவனின் அன்பு மகளாகவும் உய்த்துணர்ந்த எலிசபெத்தின் வாழ்த்துக்களைக் கேட்ட மரியா மிக அழகான பாடல் ஒன்றை இசைக்கின்றார். இறைவனை தன் உள்ளத்தில் பெருமைப்படுத்துகிறார்.

தொடர்ச்சி 27 ம் பக்கம்...........





உள்ளதே போதும் என்றிருங்கள். ஏனெனில் நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன்! உன்னை விட்டு விலக மாட்டேன் என்று கடவுளே கூறியிருக்கிறார். ஏன்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறாயின் நாம் செய்ய வேண்டியது என்ன? ஒவ்வொரு நாளும் பத்திலொரு பகுதி நேரத்தை நாம் கடவுளுக்காக, நம்முடைய ஆன்மாவின் வளமைக்காக நாம் செலவிடவேண்டும். இருபத்தி நான்கு மணி நேரத்தில் பத்திலொரு பகுதி என்பது 2 மணி 40 நிமிடங்கள் ஆகும். நாம் ஒவ்வொரு நாளும் இவ்வாறு கடவுளுடைய காரியங்களுக்காக நேரத்தை ஒதுக்குவது சேசுவுக்கும் மாதாவுக்கும் எவ்வளவு பிரியமானது என்பதை அனுபவத்தில் மட்டுமே நாம் உணர முடியும்.

**பத்திலொரு பங்கு நேரத்தை கடவுளுக்காக செலவிடும் வழிமுறை:**

தினந்தோறும் பரிசுத்த திருப்பலியில் பங்கெடுத்தால் ஒரு மணி நேரம் செலவாகும். தினந்தோறும் குடும்ப செபமாலை குடும்பத்தினர் அனைவருடனும் சேர்ந்து செபித்தால் அரை மணி நேரம் செலவாகும். தினந்தோறும் அரை மணி நேரம் இறைவார்த்தையை வாசித்து தியானித்தல் மற்றும் நற்கருணை ஆண்டவரோடும் அன்னை மரியாவோடும் தனிமையில் இருபது இருபது நிமிடங்கள் உரையாட நேரம் ஒதுக்கினால் பத்தில் ஒருபங்கு நேரத்தை நாம் முழுமையாக கடவுளுக்கு கொடுத்து விடலாம். அடுத்ததாக சேசுவின் பாடுகளை நாம் தியானிக்கலாம். சேசுவின் பாடுகள் என்பது செபமாலையில் துக்க தேவ இரகசியங்களை தியானித்தல், சிலுவைப்பாதை தியானித்து செபித்தல், திருப்பாடுகளின் கடிகாரம் என்று சொல்லக் கூடிய சேசுவின் 24 மணி நேர வேதனைகளை வரிசைப்படுத்தி முதல் மணியில் சேசு அனுபவித்த வேதனைகளை பற்றி சிந்திக்கலாம். இவ்வாறு மாதத்தின் முதல் நாள் சேசுவின் முதல் மணி வேதனையை சிந்தித்து ஒரு சிறு செபத்தை சொந்தமாக சொல்லி முடிக்கலாம். மீதமுள்ள 7 நாட்களும் அன்னை மரியாவின் ஏழு வியாகுலங்களை தியானித்து சொந்தமாக சிறிய செபம் ஒன்றைச் சொல்லி முடிக்கலாம். அல்லது 31 பேர் கொண்ட குழுவை உருவாக்கி ஒவ்வொருவரும் சேசுவின் ஒரு மணி நேர துன்பத்தை தேர்ந்தெடுத்தும் அன்னை மரியாவின் வியாகுலங்களை தேர்ந்தெடுத்தும் அவரவர்க்கு வசதியான நேரங்களில் மேற்கண்ட தியானங்களை மேற்கொள்ளலாம். இறுதியில் குழுவில் உள்ள அனைவரும் பொதுவான ஒப்புக் கொடுத்தல் செபத்தை சொல்லி பல்வேறு மன்றாட்டுகளை சொல்லி ஒப்புக் கொடுக்கலாம். இதில் ஒருவர் மற்றவரின் செப நேரத்தை ஊக்கப் படுத்த முயற்சிக்க வேண்டும். குருவானரின் ஆலோசனையை பெற்று செயல்படுவது மிகச் சிறந்ததாகும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இந்த 31 பேரும் ஏதாவதொரு விடுமுறை நாளில் ஒன்று கூடி ஆன்மீக உரையாடல் மேற்கொள்ளலாம். இக்குழுவிற்கு அன்னை மரியாள் மட்டுமே தலைவியாக இருக்க வேண்டும். முயற்சி செய்வோம்! அன்னை மரியாள் வழி சேசுவின் ஆசீரை நிறைவாகப் பெறுவோம்.

மரியே! எங்கள் நல்ல ஆசிரியையே! வாழ்க!



# பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 10

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

தந்தையாம் இறைவனின் அன்புப் பிள்ளைகளாகிய நாம், நம் அன்புத் தாயாம் அன்னை மரியாவை வழிநடத்தும் ஆசிரியையாகக் கொண்டு தாவீது கோலியாத்தை வெற்றி கொள்ள எடுத்துச் சென்ற கூழாங்கற்களை (1 சாமுவேல் 17:40) அடிப்படையாகக் கொண்டு ஞான ஆயுதங்களை பற்றி சிந்தித்தோம். அதன் அடிப்படையில் மூன்றாவதாக அன்னை மரியாள் நமக்கு கற்றுத் தரும் நம்முடைய ஆன்ம ஈடேற்றத்திற்கான படிப்பினைகளை கருத்துடன் படித்து சிந்திப்போம்.

**அன்னை கற்றுத் தரும் பாடம்:**

என் அன்பு மகனே! மகளே! இன்று நான் உனக்கு கற்றுத்தரும் பாடம் எதைப் பற்றியது என்றால் எபிரேயர் 12:2-3 இல் ‘நம்பிக்கையை தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களை பதிய வைப்போம். அவர் தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு, இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக் கொண்டார். இப்போது கடவுளது அரியணையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார். பாவிகளால் தமக்கு உண்டான எந்த எதிர்ப்பையும் மன உறுதியோடு தாங்கிக் கொண்ட அவரை எண்ணிப்பாருங்கள். அப்போது நீங்கள் மனம் சோர்ந்து தளர்ந்து போக மாட்டீர்கள்.’ என்னும் இறைவார்த்தைகளின் அடிப்படையில் ஒருசில வழிமுறைகளை தெரிவிக்க ஆசிக்கிறேன். அன்புப் பிள்ளைகளே! உங்கள் எண்ணங்கள், சிந்தனைகள், செயல்கள் அனைத்திலும் மையமாக இருக்க வேண்டியவர் இயேசு ஒருவர் மட்டுமே! எப்போதும் சேசுவின் பாடுகளையும் மரணத்தையும் சிந்தித்து அவரை ஆராதித்துக் கொண்டிருந்தால் உங்களுக்கு வேண்டியதை அவரே தருவார் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருங்கள்.

**அன்னையின் பாடத்தை நடைமுறை வாழ்வில் செயல்படுத்துதல்:**

ஒவ்வொரு நாளும் நாம் பல வேலைகளில் மூழ்கி அதே சிந்தனைகளோடு நம் வாழ்வின் ஒவ்வொரு நாளையும் நாம் செலவழித்து வருகிறோம். உலகக் காரியங்களுக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவம் ஆன்மீக காரியங்களுக்கு கொடுப்பதில் தவறி விடுகிறோம். பல நேரங்களில் நாம் எடுக்கும் முடிவுகள் நமக்கு தோல்வியையே தருகின்றன. ஏனென்றால் அன்னை மரியாவோடும் தூய ஆவியாரோடும் இணைந்து செப உணர்வுடன் முடிவுகள் எடுக்காததே தோல்விக்கான காரணம் ஆகும். எபிரேயர் 13:5 இல் பொருளாசையை விலக்கி வாழுங்கள்,





# அன்னையின் 79 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



மரியா: ரோஜா மிஸ்திகா (Rosa Misitica) மற்றும் திருச்சபையின் அன்னை திருத்தலம்

துறவியர் மற்றும் குருக்களின் மனமாற்றத்திற்கான அழைப்பு விடுக்கும் அன்னை மரியா

அன்னை மரியாவின் பரிந்துரையை நாடி நாம் செலுத்தும் செபங்களில் ஒன்றாக அமைந்துள்ளது மரியாவின் மன்றாட்டு மாலையாகும். அன்னையோடு இணைந்து ஆண்டவரின் வாழ்வின் நிகழ்வுகளை தியானிக்கும் செபமாலை செபித்து தியானிக்கும் தருணத்தில் இறுதியாக அன்னையின் மன்றாட்டு மாலையோடு நம் செபங்கள் நிறைவுபெறுவது வழக்கமான ஒன்றாகும். அம்மன்றாட்டு மாலையில் அன்னையின் புகழ்கூறும் பல்வேறு அடைமொழிகளில் ஒன்றாக நாம் செபிப்பது, “மறைப்பொருளை கொண்ட ரோஜா மலரே” என்கிற வாழ்த்துரையாகும். பல நூற்றாண்டுகளாக அன்னை பல இடங்களில் காட்சி தந்தவண்ணமாயிருக்கிறார். ஒவ்வொரு காட்சியிலும் தன்னை பல்வேறு பெயர்களில் வெளிப்படுத்திக் கொண்டாலும் ‘மறைப்பொருளை கொண்ட ரோஜா மலரே’ என்று தன்னை வெளிப்படுத்தியது 20ம் நூற்றாண்டில் தான் நிகழ்ந்தது.



ரோஜா மிஸ்திகா என்று அறியப்படும் அன்னையின் காட்சியானது வடஇத்தாலி நாட்டில் உள்ள பிரெஸ்யா (Brescia) நகரின் அருகாமையில் அமைந்துள்ள மோன்திகியாரி (Montichiari) என்கிற ஊரிலும், இவ்வூரின் புறநகர் பகுதியில் அமைந்துள்ள ∴ பொன்தெனெல்லே (Fontenelle) என்கிற இடத்திலும் காட்சி தந்ததாக கூறப்படுகிறது. விவசாய நிலங்களால் சூழப்பட்டுள்ள இப்பகுதியானது பசுமை பச்சாடை உடுத்தி காண்போரின் கண்களை குளிர்விக்கிறது.

இரண்டாம் உலகப்போர் முடிந்திருந்த நேரமது. போரின் தாக்கத்திலிருந்து உலகம் சிறிது சிறிதாக தன்னையே மீட்டெடுத்துக்கொள்ள முயற்சித்து கொண்டிருந்தது. புது சித்தாந்தங்களும், தத்துவங்களும் தலைத்தூக்கி கொண்டிருந்த நேரம். ஆன்மீக உலகம் தளர்ச்சிகளை சந்தித்தக் கொண்டிருந்த காலமும் அது.

அன்னையின் எல்லா காட்சிகளை போல, இங்கும் திருஅவையின் கோட்பாடுகளையும், விவிலிய விளக்கங்களையும் அறிந்திருந்தவர்களுக்கு அன்னை காட்சியளிக்கவில்லை. மாறாக, எளிய விவசாய பிண்ணனியை கொண்டிருந்த பியரினா ஜில்லி (Pierina Gilli) என்பவருக்கு காட்சி தந்தார்.



பொருளாதாரத்தில் ஏழ்மையாகவும், விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றியிருந்த விவசாய குடும்பத்தில் ஒன்பது குழந்தைகளில் மூத்தவராக பியரினா கி.பி. 1911ஆம் ஆண்டு ஆகஸ்டு 3 நாள் பிறந்தார். ஏழ்மையும் அத்தோடு பிண்ணிப்பிணைந்திருந்த நோயும் அவரை வதைத்தாலும், விசுவாசத்தில் ஆழமாக வளர்ந்தார் பியரினா. தன் வாழ்வு முழுவதையும் இறைப்பணிக்காக அர்ப்பணிக்க விரும்பிய அவர். பிரெஸ்யா நகரில் இரக்கத்தின் பணியாளர்கள் சபையில் சேர்ந்து இறைப்பணியாற்ற விரும்பினார். ஆனால், உடல் நலக்குறைவின் காரணத்தால் அவரது ஆசை நிறைவேறவே இல்லை என்பது ஆச்சரியம் தரும் உண்மையாகும். தன் துறவற ஆசை நிறைவேறாமல் போனாலும் உடல் நலக்குறைவினால் தனக்கேற்பட்ட சிலுவைகளை அனுதினமும் சுமந்தவராக, ஆண்டவரின் அன்பை சுவைப்பதில் தன் வாழ்நாள்களை செலவிட்டார். அன்னையின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தவராக இருந்த பியரினா அன்னையின் மன்றாட்டு மாலையில் சொல்லப்பட்ட 'ரோஜா மிஸ்திகா' என்ற புகழ்பாடலை தனது 20வது வயதிலிருந்து ஆழ்ந்து தியானித்து செபித்து வந்தார்.

தனது 35ஆம் அகவையில் பியரினாவிற்கு காட்சி ஒன்று அருளப்பட்டது. கி.பி. 1946ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் மற்றும் 24ஆம் தேதிகளுக்கிடைப்பட்ட இரவில், அவர் பணியாற்றிய மருத்துவமனையில், இரக்கத்தின் பணியாளர்களின் சபையைத் தோற்றுவித்த புனித சிலுவை மரியா தி ரோஜா (Santa Maria Crocifisso di Rosa) காட்சியில் தோன்றி அவர் இருந்த அறையின் கூரையை உற்று நோக்க அழைப்புவிடுத்தார். புனித சிலுவை மரியாவின் அழைப்பிற்கிணங்கிய பியரினாவிற்கு எல்லையில்லா மகிழ்ச்சி தரும் காட்சி அருளப்பட்டது. பியரினா தன் குறிப்பில் பின்வருமாறு எழுதுகிறார்: 'அக்காட்சியில் நீல நிற அங்கியும், வெள்ளை நிற துகிலும் அணிந்தவராக பெண் ஒருவரை கண்டேன். இரு கரங்களையும் விரித்தவராக இருந்த அவரது இதயத்தை மூன்று வாள்கள் ஊடுருவியிருந்தன'. அம்மூன்று வாள்கள் குறித்தும் புனித சிலுவை மரியா பின்வருமாறு விளக்கி கூறினார்: அன்னை மரியாள், தங்கள் தேவஅழைத்தலை மறுதலிக்கும் துறவியருக்காகவும், அவர்களின் பாவங்களுக்கு பரிகாரமாகவும், தங்கள் குருத்துவ மேன்மையை மறுதலித்து தங்களின் புனித நிலைக்கு தகுதியற்றவர்களாக மாறும் குருக்களுக்காகவும் இறை நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரும் "செபம், தியாகம், ஒறுத்தல் முயற்சிகள்" செய்ய அழைப்பு விடுக்கிறார் என்றார்.







8-ம் பக்க தொடர்ச்சி.........

மீட்பராம் இயேசு அறிவிக்க இருக்கும் இறையாட்சி சமூகத்தை நினைத்துப் பேருவகை கொள்கின்றார். சமதர்ம சமுதாயம் உருவாகப் போகிறதை தன் அகத்தில் உணர்ந்து உவகையில் மூழ்குகின்றார். மூன்று மாதங்கள் வயது முதிர்ந்த தனது உறவினருக்கு உதவி புரிகின்றார். மீட்பரின் முன்னோடியின் பிறப்புக்கு சான்று பகர்கிறார். எட்டாம் நாளில் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டு யோவான் என்ற பெயரிடப்பட, சக்கரியாவின் நா கட்டவிழ்ந்தது கண்டு ஆச்சரியத்தில் அமிழ்ந்தார். திருமுழுக்கு யோவான் ஆற்றவிருக்கின்ற பணிகளை எடுத்துரைக்கும் சக்கரியாவின் பாடலைக் கேட்டு பூரித்துப் போகின்றார். 'இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளி தரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது" என்ற அமுத வரிகள் தனது அன்பு மகனைப் பற்றியதுர் அவரின் விடுதலைச் செயல்பாடுகளே என்பதை உள்ளத்தில் ஆழ்ந்து தியானிக்கின்றார். கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை என்ற வானதூதரின் வார்த்தைகள் அனைத்தும் உண்மை என்பதை உள்ளத்திலே சுமந்தவராய் மீண்டும் நாசரேத்தை நோக்கி நடைபயில்கின்றார் இறைவனின் தாய். மூன்று மாதங்களில் செய்த சிறிய, பெரிய உதவிகள், தான் பெற்ற அறிவுரைகள், சக்கரியாவின் வீட்டினரும் இறைவனின் பார்வையில் இரக்கம் பெற்றிருப்பது ஆகிய அனைத்து நிகழ்வுகள் மனதில் மீண்டும் நிழலாட அன்னையின் முதல் திருப்பயணம் நிறைவுறுகின்றது.

**மரியாவின் பயணம் விடுக்கும் அழைப்பு**

ஆவியாரின் உள்தூண்டுதலால் மரியா மேற்கொண்ட பயணம் இது. நல்ல செய்தியை பகிர்ந்து கொள்வது, இறை ஆற்றலைக் கண்டு அதிசயிப்பது, தேவையிலிருப்போருக்கு உதவிக்கரம் நீட்டுவது, அவர்களோடு உரையாடி, உறவாடி, இறைப்பிரசன்னத்தை உணர்த்துவது ஆகிய அனைத்தும் தூய ஆவியாரின் நல் ஏவுதல்கள். மரியாவின் முதல் பயணத்தின் இறுதியில் அவர் எலிசபெத்தை சந்தித்தது ஒரு பெந்தக்கோஸ்து அனுபவமாக இருக்கிறது. ஒருவர் மற்றவரில் இறைவன் என்ன செய்கிறார் என்பதை இருவரும் புரிந்து கொள்கின்றனர். ஆளுமையின் முழுமையில் ஒருவர் மற்றவரை எதிர்கொண்டு இறைவன் அவர்களுக்கும் அவர்கள் வழியாக செய்திருக்கும் அனைத்தோடும், ஒருவர் ஒருவரை ஏற்றுக் கொள்கின்றனர். இத்தகைய எதிர்கொள்ளலில் இருந்து தான் விடுதலைக்கீதம் எழும்புகின்றது. நமது பயணங்கள் அதன் நோக்கம், விளைவு, முடிவுகள் எவ்வாறு இருக்கின்றன? முதிர்ந்த வயதில் தனது உறவினர் கருவுற்ற செய்தியை கேட்டதும் அன்னை மரியா எழுந்து, விரைந்து, யூதேய நாட்டிற்குப் பயணமாகி எலிசபெத்தைச் சந்தித்தார். நாமும் நமது இல்லங்களிலோ, மருத்துவமனையிலோ நாம் வாழும் பகுதிகளிலோ நோயுற்றோர், தேவையில் இருப்போரை சந்திக்க, உதவி செய்ய விரைவோம். நேரம் ஒதுக்குவோம். ஜூபிலி ஆண்டில் இரக்கச் செயல்கள் புரிந்து ஏழைகளோடும் தோழமை உறவுகளை வலுப்படுத்திக் கொள்வோம். நமது குடும்பங்களில், சொந்த பந்தங்களில் எத்தனையோ பேர் உதவியை, அறிவுரையை, அன்பை எதிர்பார்த்து ஏங்கிய கண்களுடன் இருக்கின்றார்கள். அவர்களில் இயேசுவைக் கண்டு கொள்வோம். பெரிய திருத்தலங்கள், நீண்ட திருப்பயணங்கள் என்று நாம் அதிக பயணங்களில் நேரம் செலவிடுகிறோம். நமது அருகில் இருக்கும் ஏழை எளியவரோடு நேரங்களை செலவிடுவோம். மற்றொரு கிறிஸ்துவாக வாழ்வோம். இதுவே அன்னையின் முதல் பயணம் தரும் முக்கிய செய்தியாகும்.

ஆலெக்ஸான்டிரியா சிரில் தனது முதல் திருமடலில் பின் வருமாறு விவரிக்கின்றார். கன்னி மரியா கிறிஸ்துவின் தாய் என்று கூறுவதன் மூலம் இறைவனின் தாய் என்னும் அவரது மேன்மையான நிலையை இகழ்ச்சிக்கு உள்ளாக்குகிறோம். ஏனெனில் தாவீது மற்றும் ஆரோன் போன்றோர் கிறிஸ்து என அழைக்கப்பட்டனர். ஏனெனில் அரசகுருத்துவ திருநிலைப்பாடுகளில் அருள் பெழிவு செய்யப்படுவது அன்றைய காலககடடங்களழல வழக்கமானது. கடவுளைத் தாங்கிய எந்த ஒரு மனிதனும் கிறிஸ்து என அழைக்கப்படடார். தலைமை குருவும் இவ்வாறுதான் அழைக்கப்பட்டார்.

இவ்வாறு நெஸடோரியஸ மரியாவின் உயர்ந்த நிலைக்கு களங்கம் வளைவிக்கின்றார். எனவே அவரது இக்கூற்று தப்பறைக் கொள்கையாகக் கருதப்படுகிறது. அவரது இக்கருத்தால் ஞானத்தின் இருப்பிடம் கேள்விக் குறியாகிறது.

சிரில் தனது இரண்டாவது மடலில் இயேவு கிறிஸ்துவான கடவுளைத் தாங்கியவர் என பேசுவதையோ நினைப்பதையோ கடவுள் விரும்புவதில்லை. ஏனெனில் இறைவனான இவா மனு உருவானார். மனு உருவானது மரியின் உடலே என்னும் உண்மையினை உறுதிப்பட கூறுகின்றார். இவ்வாறு ஞானதேவன் ஞானத்தாயின் தவப்புதல்வன் என்பது எதார்த்தமான உண்மையாகிறது. இவ்வாறு இயேசு என்னும் ஞானியைத் தன் உடலில் தாங்கிய தன் மடியில் தாலாட்டிய தன் மார்பில் பாலூட்டிய புதுமையான இருப்பிடமாகவும் நற்கருணைப் பேழையாகவும் நம்பிக்கையின் கூடாரமாகவும் காட்சி தருகின்றார்.

### ஞானத்தின் இருப்பிடம் மரியா

திருவழிபாட்டில் மரியா ஞானத்தின் இருப்பிடம் என புகழப்படுவதோடு அத்தகைய ஞானத்தின் பதிலியாகவும் பார்க்கப்படுகின்றார். திருச்சபை பாரம்பரியம் ஞானம் பற்றிய மிக ஆழமான அழகான பகுதிகளை நீதிமொழிகள் நூலிலிருந்து எடுத்து ஆராய்ந்து அதனை மரியாவின் குணநலன்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றது. கடவுளின் அதிசயங்கள் ஞான வடிவிலே அவரில் புதைந்து கிடைக்கின்றன. எனவேதான் தன்னை நாடி வரும் கோடிப்பேருக்கு நன்மைகளை அதிசயங்களைப் பொழிகின்றார். சீராக்கின் ஞானம் 24ம் அதிகாரமும் மரியாவோடு தொடர்புடைய பகுதி என திருச்சபை பாரம்பரியம் சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறு மரியா ஞானம் நிறைந்து ஞானியாக நின்று ஞானத்தை அனைவருக்கும் அள்ளி தெளிக்கும் பரந்து விரிந்த ஆழியாகின்றார். அவரது ஞானத்தைப் பெற்றிட கோடான கோடி மக்கள் கூட்டம் கூட்டமாக அவரது ஆலயம் தேடிச் செல்கின்றனர். ஞானம் நிறைந்த அவரது ஆசிரை அள்ளி பருகுகின்றனர். அவரது ஞானம் கருணை வடிவமானது ஒளி வடிவில் பிரகாசிக்கின்றது. அன்பு வடிவல் அசைவாடிகிறது. ஞானம் ஒருவன் முகத்தை ஒளிமயமாக்கும் அதிலுல்ல கடுகடுப்பை நீக்கும. இத்தகைய ஞானம் மரியாவின் முகத்தை மட்டுமல்ல அவரது வாழ்வையே ஒளிமயமாக்கியது.

தூய ஆவியின் கொடைகளில் ஒன்று ஞானம் மரியா தனது தாயின் வயிற்றிலிருந்த போதே ஞானத்தை கொடையாகப் பெற்றிருந்த போதிலும் அவர் தூய ஆவியினால் கருத்தரிக்கும் பொழுது அவரது ஞானம் புதுப்பக்கப்பட்டது. இரத்த தானம் செய்யும் போது புதிய இரத்தம் உற்பத்தியாகி உடலில் பாய்வதுப்போல தனது ஞானத்தை பிறருக்கு வாரிவழங்குவதன் வழியாக தன்னிலே மீண்டும் மீண்டும் இறை ஞானத்தால் நிரப்பப்படுகின்றார். அன்னை மரியா இவ்வளவு ஞானம் இருந்தும் அவர் தன்னிலை பெருமை பாராட்ட இல்லை. தற்புகழ்ச்சி கொள்ள வில்லை. மாறாக அவரது பெருமையை வானதூதர் பறைசாற்றுகின்றார். அவரது உயர்வினை எலிசபெத்து உலகுக்கு எடுத்துரைத்தார்.

இன்னும் பல பக்தர்கள் அவரது புதுமைகளையும் புண்ணியங்களையும் புகழ்ந்த வண்ணமாயிருக்கின்றனர். இவையெல்லாம் ஞானத்தின் வெளிப்பாடே!





பிரினா அவர்களுக்கு அன்னை மரியாள் மீண்டும் கி.பி. 1947ஆம் ஆண்டு ஜீலை 13ஆம் தேதி காட்சி தந்தார். அக்காட்சியின் போது அன்னை முழுநீள வெந்நிற ஆடை அணிந்திருந்தார். மேலும் அவரது இருதயத்தில் மூன்று வாள்களுக்குப் பதிலாக வெள்ளை, ரோஸ் மற்றும் மஞ்சள் நிற ரோஜா மலர்கள் இருந்தன. அவற்றில் வெள்ளை நிற ரோஜா மலர் செபத்தையும், ரோஸ் நிற ரோஜா மலர் தியாகத்தையும், மஞ்சள் நிற ரோஜா மலர் ஒறுத்தல் முயற்சியையும் குறிப்பனவாக அமைந்திருந்தன. ஒவ்வொரு ஜீலை 13ம் தேதியும் அன்னைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட விழாவாகவும், அவ்விழாவிற்கு 12 நாள்கள் முன்தயாரிப்பாக செபங்கள் மற்றும் பக்தி முயற்சிகள் செய்யவேண்டும் என்றும் அழைப்புவிடுத்தார்.

அதே ஆண்டு நம்பர் 22ஆம் தேதி அன்னையின் செய்தியானது பியரினாவிற்கு வழங்கப்பட்டது. அச்செய்தியில் அன்னை மரியாள் தனது அமலஉற்ப விழாவான டிசம்பர் 8ஆம் தேதி மோன்தேகியாரி மறைமாவட்ட பேராலயத்தில் காட்சி தருவதாக வாக்களித்தார். பேராலத்தில் காட்சி தருவதற்கு முந்தினநாள் டிசம்பர் 7ஆம் தேதி அன்னை பியரினாவிற்கு காட்சியளித்தார். அக்காட்சியில் அன்னையுடன் ஒரு சிறுவரும், ஒரு சிறுமியும் இருந்தனர். அவர்கள் பாத்திமா நகரில் அன்னையின் காட்சி கண்ட ஜெசிந்தா மற்றும் பிரான்சிஸ்கோ ஆவர். அன்னையின் காட்சி கண்டதாக அவர்கள் அறிவித்த நாட்களில் பல்வேறு விதமான துன்பங்களை அனுபவித்தார்கள். பியரினாவு அதே போன்ற துன்பங்கள் அனுபவிக்க நேரிடும் என்கிற செய்தியுடன், அன்னையின் மாசுமறுவற்ற இதயத்திற்கு உலகம் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் என்கிற வேண்டுதலும், இறைவனுக்கு தங்களையே அர்ப்பணித்த துறவியர் மற்றும் குருக்களுக்காக இறைவிடா செபம் செய்யப்பட வேண்டும் என்கிற அறிவுறுத்தலும் பியரினாவிற்கு வழங்கப்பட்டது.

அமல உற்பவியான அன்னையின் பெருவிழாவாகிய டிசம்பர் 8ஆம் நாள் மோன்தேகியாரி பேராலயம் இறைமக்களால் நிரம்பி வழிந்தது. அன்னையின் காட்சியை காண பேறுபெற்றோரின் கூட்டத்தில் தாங்களும் ஒருவராக இருந்தோம் என்கிற ஆர்வம் அவர்களில் வழிந்தோடியது. ஆழ்ந்த செபத்தில் ஈடுபட்டிருந்த பியரினா பேராலயத்தில் நடுவில் விண்ணிலிருந்த இறங்கி வரும் ஒரு படிக்கட்டில் மாசற்ற இதயம் மரியாள் இறங்கி வருவதை கண்டதாக பியரினா விவரிக்கிறார். விண்ணகத்திலிருந்த வந்த அன்னை தான் கடவுளால் அனுப்பட்டதாகக் கூறி,' திருச்சபையின் தாய், சொர்க்கத்தின் வாசல், மக்களின் ஒளி' என தன்னை வெளிப்படுத்துகிறார். மக்களுக்காக பரிந்து பேசி அவர்களை கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்வதே தனது பணி என்பதை வெளிப்படுத்துகிறார். இச்சூழலில் ஒரு புதிய பக்தி முயற்சிக்கும் அன்னை அழைப்புவிடுக்கிறார்: "ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 8ஆம் தேதி, 'உலகளாவிய அருளின் நேரம்', நண்பகலில் அனுசரிக்கப்பட வேண்டும் என நான் விரும்புகிறேன். இந்த பக்தி முற்சியில் பங்குகொள்கிற ஒவ்வொருவரும் ஏராளமான ஆன்மீக மற்றும் உடல், உள ரீதியான அருளைப் பெறுவீர்கள். ஆலயத்திற்கு செல்ல முடியாதவர்கள் தங்கள் வீடுகளிலிருந்தே இப்பக்தி முயற்சியில் பங்கேற்பதன் வழியாக அதே அருளை பெறுவார்கள்" என்று அறிவித்தார். மேலும், இறைநம்பிக்கையும், நல்உள்ளமும் கொண்ட ஒவ்வொரும் பாவநிலையில் உள்ள தங்கள் சகோதரர்களுக்காக செபிக்கிற பொழுது, அவர்களுக்கு நிறைஆசீர் வழங்குவதாக தன் மகனும்,

ஆண்டவருமான இயேசு வாக்களித்திருக்கிறார் என்ற செய்தியையும் பியரினா வழியாக அன்னை வழங்கினார்.. அத்துடன், ரோஜா மிஸ்திகா திருஉருவத்தை பகதியுடன் வீதிகளில் எடுத்துச் செல்லும் போது அதை காண்கிற ஒவ்வொருவரும் உடல், உள குணத்தை பெறுவார்கள் என்றும், அத்தகைய பயன்பாட்டிற்காக அன்னை சிரூபங்கள் வடிக்கப்பட்ட உலகின் அனைத்து பகுதிகளுக்கும் அனுப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

பியரினாவிற்கு வெளிப்படுத்தப்பட்ட இக்காட்சிகளின் நம்பகத்தன்மையை ஆய்ந்தரிய திருஅவை விரும்பியது. அதற்கு ஏதுவாக, பியரினா ஒரு சில மாதங்களுக்கு தொஸ்கன் மாகணத்திற்கு அனுப்பப்பட்டார். பின், பிரெஸ்னா நகரில் இருந்த ஜிலியோ பிரான்சிஸ்கன் அருட்சகோதரிகள் இல்லத்தில் விருந்தினராக, கி.பி. 1949ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டார். ஒரு சில மாதங்களே அவர் அவ்வில்லத்தில் தங்கி இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட சுழலில், அவர் அங்கேயே விருந்ததினராக ஏறக்குறை 20 ஆண்டுகள் தங்கியிருந்தார். அதன்பின் மோன்தேகியாரி திரும்பி அவர் பேராலயத்தின் அருகில் ஒரு சிறிய வீட்டில் ஒரு சில மாதங்கள் தங்கியிருந்தார். அதன் பின் ஒரு சில உபகாரிகளின் உதவியால் போஸ்கெத்தி என்கிற பகுதியில் ஒரு சிறுவீட்டில் தன் இறுதிகாலம் வரை பியரினா வாழ்நதார்.

இக்காலக்கட்டத்தில், கி.பி. 1966 ஆம் ஆண்டின் ஆண்டவரின் உயிர்ப்பு ஞாயிறான ஏப்ரல் 17 ஆம் தேதி, மோன்தேகியாரி புறநகர் பகுதியில் இருந்த கோதுமை வயல்வெளியில் அமைந்திருந்த பண்டைய நீரூற்றான புனித ஜார்ஜ் நீரூற்றுக்கருகில் அன்னை மரியாள் பியரினாவிற்கு காட்சியளித்தார். விசுவாசத்துடன் அந்நீரூற்று வரும் நோயாளிகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு குணமளிப்பார் என்று வாக்களித்தார். அன்னை தாமே தன் விரலால் நீரூற்றின் இரண்டு இடங்களில் தொட்டு ஆசீர்வதித்தார்.

அவ்வாண்டில், பாத்திமா நகரில் அன்னையின் முதல் காட்சியை நினைவுகூறும் மே மாதம் 13ஆம் நாள் அன்று அன்னை மரியாள் புனித ஜார்ஜ் நீரூற்றில் ஒரு சிறிய குளம் கட்டப்பட வேண்டும் என்றும், அக்குளத்தில் இறங்கி நடப்போர் மனமாற்ற பெற்று, நிறைவான இறையாசீர் பெறுவர் என்றும் வெளிப்படுத்தினார்.. அவ்விடம் “கருணை மற்றும் இரக்கத்தின் நிரூற்று” என்றழைக்கப்பட வேண்டும் என்றும் அன்னை அறிவுறுத்தினார்.



கி.பி. 1966ஆம் ஆண்டு ஜீன் 9ஆம் தேதி, ஆண்டவரின் திருஉடல், திருஇரத்த பெருவிழாவான்று, பழுத்து அறுவடைக்கு காத்திருந்த கோதுமை வயல்வெளியில் அன்னை மரியாள் பியரினாவிற்கு தோன்றி, அக்கோதுமை கதிர்களை அறுவடை செய்து, அரைத்து அதிலிருந்து பரிகார நற்கருணைகளுக்கான (communions of Reparaiton) அப்பங்களை செய்யும் படி வேண்டுதல் விடுத்தார். அவ்வாண்டின் ஆகஸ்டு 6ஆம் தேதி





# மாதா மன்றாட்டு மாலை

22



## ஞானத்தின் இருப்பிடமே

ஆண்டவரிடம் அச்சம் கொள்ளுதலே ஞானத்தின் தொடக்கம். அது இறைப்பற்றுள்ளோர்க்குத் தாய் வயிற்றிலிருக்கும் பொழுதே வழங்கப்படுகிறது. இந்த இறைவார்த்தை குறிப்பிடும் புனிதையாக அன்னை மரியா பவனி வருகிறார். மரியா தனது வாழ்நாள் முழுவதும் ஆண்டவருக்கு பயந்து நடந்த அவரது வார்த்தைக்கும் பணிந்து வாழ்ந்த அவரது உச்சமான திட்டத்துக்கு அடிபணிந்தார். இவ்வாறு ஆண்டவரிடம் அவர் கொண்ட அச்சம் அவரை ஞானத்தின் கருவுலமாக்கியது. இறைப்பற்று நிறைந்த அவருக்கு தாயின் வயிற்றிலிருக்கும் போதே அது வழங்கப்பட்டிருந்தது. அருள் மிகுப் பெற்றவரே வாழ்க ஆண்டவர் உம்முடனே என்ற இறைவார்த்தைகளைக கேட்ட மரியா கலங்கி இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணக்கொண்டிருந்தார். இவ்வாறு இறைவனின் மீதும் இறைவார்த்தையின் மீதும் மரியா கொண்டிருந்த அச்சமும் கலக்கமும் அவரது ஞானத்தின் தொடக்கத்திற்குக் காரணமாக அமைந்தன அன்று தனது தாயின் வயிற்றிலிருக்கும் பொழுதே தொடங்கிய அவரது ஞானம் இன்று வேர்விட்டு விழதுள்ள விழுந்து பறவைகள் தங்கும் பெரிய மரமாகப் பலருக்கும் பலனரிந்துக் கொண்டிருக்கிறது. ஏழை பணக்காரர் உயர்ந்தவர் தாழ்ந்தவர் படித்தவர் பாமரர் என எந்தவித பேதமுமின்றி அனைவருக்கும் ஞானக் கதிர்களை உதிர்த்துக் கொண்டிருக்கிறார் மரியா.

**ஞானத்தின் (இயேசு) இருப்பிடம் மரியா**

இயேசு கிறிஸ்து ஒளியாகவும் வழியாகவும் உயிராகவும் உண்மையாகவும் வாழ்வாகவும் ஞான வடிவாகவும் இருக்கிறார் எனப் பல கோணங்களில் அவரது பண்புகளை நற்செய்தி சுட்டிக்காட்டுகிறது. இத்தகைய இயேசு என்னும் ஞானத்தைப் பெற்றெடுத்தவர் மரியா பத்து மாதங்கள் தனது கருவறையிலே அவரை சிறைப்பிடித்திருந்வர் மரியா. அவர் பிறப்புக்குப் பின்னும் அவரது வாழ்வில் வளர்த்தெடுத்தவர் மரியா. ஞானத்தால் இருந்த இடமெல்லாம் ஞானத்தூதனுக்கு இருப்பிடமானது. இவ்வாறு மரியாவின் வளாப்பில் இயேசுவின் ஞானம் வளர்ப்பிறையானது. இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார். இயேசுவின் இத்தகைய ஞானம் அன்னையின் கருவரையில் பரிசுத்த ஆவியின் வல்லமையால் உருவானது. தாயைப்போல பிள்ளை நூலை போல சேலை என்னும் கூற்று இங்கே தெளிவாய்கிறது. ஞானமே உருவாகிய இயேசுவுக்கு இருப்பிடமாக மரியா திகழ்கிறார். என்பதற்க்குப் பல உண்மைகள் சாடசியம் தருகின்றன.(கிரகோரி) நாசியான்சன் தூய கன்னி மரியா உண்மையாகவே இறைவனின் தாய் புனித ஜான் தமஸ்கு வார்த்தையின் தெய்வீகத் தன்மை மரியாவிடமிருந்து தோன்றியதில்லை மாறாக காலங்களுக்கெல்லாம் அப்பாற்ப்பட்டு முடிவில்லாத தந்தையோடும் தூய ஆவியானவரோடும் என்றும் வாழ்கின்ற வார்த்தையான இறைவன் நமது மீட்பிற்க்காக மனுஉருவாகி பிறந்தார் என்று கூறப்படும் நிலையில் அவரது பிறப்பிடம் மரியாவின் இருப்பிடமே என்பது மறுப்பதற்கில்லை கடவுளின் தாய் என்பது இயேசு மனுஉருவானார் என்னும் மறைஉண்டையின் பிரதிப்பலிக்கும் கண்ணாடி பிம்பமாகும்.



# வணக்கத்துக்குரிய மரியா எலிசா ஆண்ரியோலி



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

அன்னை மரியா எலிசா ஆண்ட்ரியோலி 1861ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் தேதி இத்தாலியின் அகுலியாரோவில் மார்கோ மற்றும் மார்கரிடா ஆகியோருக்கு மகளாகப் பிறந்தார். தன்னுடைய வாழ்வில் இறை விருப்பத்தை தேடிய நீண்ட பயணம் அவரை 1891ஆம் ஆண்டில் விதோர் எனுமிடத்திற்கு அழைத்துச் சென்றது. அங்கு, அவரது தாயார் மார்கரிடா மற்றும் இரு தோழியர்களான அக்னெஸ், கார்மெலா ஆகியோருடன் சேர்ந்து பெண்களுக்கான ஒரு மரியின் ஊழியர் (Serve di Maria Riparatrici) எனும் சபையைத் தொடங்கினார்.

1902ஆம் ஆண்டில் அன்னை மரியா எலிசா இரண்டாவது குழுமத்தை திறந்தார். 1903ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதி, மறைமாவட்ட ஆயர் அந்தோனியோ போலின் அவர்களால் இந்த புதிய குழுமம் அங்கீகரிக்கப்பட்டது. 1911ஆம் ஆண்டில், ஆயர் பியோ தோமாசோ அழைப்பின் பேரில் ரோவிகோவிற்குச் (Rovigo) சென்றார். அதே ஆண்டு டிசம்பர் 29ஆம் தேதில் மரியா டோலோரஸ் என்கிற மற்றொரு சகோதரியும் சபையில் சேர்த்து கொண்டு இருவரும் சேர்ந்து மரியன் பரிகாரத்தை ஊக்குவித்தார். முதல் சகோதரிகளுடன், சேர்ந்து அன்னை மரியா எலிசா, நமது அன்னை மரியாளை பற்றி நன்கு அறிந்துகொள்ளவும் அவர்மீது அன்பு வைக்கவும் மக்களைத் தூண்டியதோடு, கல்வி மற்றும் தாராள மனப்பான்மையோடு அறம் செய்வது போன்ற சமூக மற்றும் திருச்சபையின் தேவைகளுக்கும், நற்பணி செய்தார்கள். நற்செய்தியின் பணிப்பணியாளர் உணர்வுடன், 1921ஆம் ஆண்டில் சகோதரிகளை அமேசான் (பிரேசில்) பகுதிக்கு அனுப்பினார்.

அவர் தனது சபையை அறிவுடனும் அதே நேரத்தில் நிறைந்த அன்புடனும், அரிய ஞானத்துடனும், ஆன்மீக வலிமையுடனும் வழிநடத்தினார். மாத்ரே எலிசாவின் சில சிந்தனைகளிலிருந்து, அவர் அசைக்கமுடியாத இறைநம்பிக்கையுடன் வாழ்ந்ததைக் காணலாம். கடவுளின் மீதான நம்பிக்கை மட்டுமே அவரைத் தாங்கியது என்று அவரை பற்றி அறிந்தவர்கள் கூறுவார்கள். அவர் எழுதிய கடிதங்களிலும் இந்த ஆழ்ந்த நம்பிக்கை வெளிப்படுகிறது. அவர் அடிக்கடி கூறுவார்: இறை வேண்டலிலும் , கடவுளின் நன்மையிலும் அளவில்லா நம்பிக்கையும் வைத்தால், அதிசயங்களைக் காண்போம் (கடிதம் 10-3-1918 ). தீமையை எதிர்த்துப் போராட்டத்தில் வெல்ல, ஜெபமும் கடவுளில் நம்பிக்கையும் எனும் இரு ஆயுதங்களைப் பயன்படுத்தினார். நாம் அனைவரையும், எல்லாவற்றையும் இந்த இரண்டு சக்திவாய்ந்த ஆயுதங்களால் வெல்வோம்! (கடிதம் 22-1-1914 ). இவ்வாறு இறை நம்பிக்கையில் வாழ்ந்த அன்னை டிசம்பர் 1, 1935ஆம் தேதி ரோவிகோவில், இயேசு, இயேசு, இயேசு என்று மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே புனிதமாக மரித்தார். கல்லறையில் இருந்த அவரது உடலை 2015 செப்டம்பர் 18 முதல் ரோவிகோவின் வியாகுல அன்னை திருத்தலத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. 2010 டிசம்பர் 10ஆம் தேதி, பெனடிக்ட் XVI அவர்கள் அவரது வீர பெண்மணி என்று அங்கீகரித்து, அவரை வணக்கதுரியவர் என்று அறிவித்தார். அன்னை மரிய எலிசாவின் வாழ்க்கை, இறைவனில் அடங்கிய நம்பிக்கையின் ஒரு எடுத்துக்காட்டாகும்!





ஆண்டவரின் உருமாற்ற பெருவிழாவன்று பியரினாவிற்கு தோன்றிய அன்னை மரியாள், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 13ஆம் தேதி உலக பரிகார நற்கருணை ஒன்றிய கொண்டாட்டத்தை (Wordl Union of communion Reparation) கொண்டாட ஊக்குவித்தார்.

இக்காட்சியுடன், மோன்தேகியாரின் ஃபொன்தெனெல்லே பகுதியில் பியரினா ஜில்லிக்கு வழங்கப்பட்ட, "மறைபொருளை கொண்ட ரோஜா மலர், திருச்சபையின் அன்னை" அன்னை மரியாவின் காட்சியானது, மூன்று வாள்கள், மூன்று வண்ணநிற ரோஜா மலர்கள், கருணை மற்றும் இரக்கத்தின் நீறூற்று, மற்றும் பரிகாரா நற்கருணை என்ற அடையாளங்களை அளித்து, அனைவரின் மனமாற்றத்திற்காக, குறிப்பாக துறவியர் மற்றும் குருக்களின் மனமாற்றத்திற்காக, புதிய பக்தி முயற்சியான 'அருளின் நேரம்', மற்றும் 'உலக பரிகார நற்கருணை ஒன்றிய கொண்டாட்டத்தை' ஏற்படுத்தியதோடு நிறைவு பெற்றது.

அன்னையின் காட்சிகளை பெற்றும், திருஅவை மற்றுமு், இறைமக்களின் ஆன்மீக நலன்களுக்கான பல செய்திகளை பெற்று தந்த பியரினா எளிய வாழ்க்கை வாழ்நதார். தன்னுடைய ஆன்மீக வளர்ச்சியில் அக்கறை காட்டிய அவர், கி.பி. 1991ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் தேதி உடல்நலக்குறைவினால் இறைவனடி சேர்ந்தார்.

மறைமாட்ட அளவிலான ஆய்வுகளுக்கு பிறகு, கி.பி. 2019ஆம் டிசம்பர் 7ஆம் நாள், அன்னை மாயிாவின் அமலோற்ப திருவிழா திருவிழிப்பு திருப்பலியில், ரோஜா மிஸ்திகா அன்னையின் ஆலயமானது மறைமாவட்ட அன்னையின் பேராலயமாக அன்றைய ஆயர் தெரேமொல்தா அவர்களால் அறிவிக்கப்பட்டது.

பல்வேறு நிலைகளில் ஆய்ந்தறிந்த திருஅவையானது, இக்காட்சிகளில் இயற்கைக்கு அப்பாற்பட்ட எதுவும் இல்லையென்றாலும், அக்காட்சிகளில் வழங்கப்பட்ட செய்திகளில் திருச்சபையின் படிப்பினைகளுக்கு எதிரானதும், புறம்பானதும் எதுவுமில்லை என்று சான்றளித்து, கி.பி. 2024ஆம் ஆண்டு ஜீலை 8ஆம் தேதி திருத்தநதை பிரான்சிஸ் அவர்களின் ஒப்புதலோடு, திருஅவையின் நம்பிக்கை கோட்பாட்டிற்கான பேராயம் (Dicastery for the Doctrine of the Faith) இறைமக்களின் பொதுவழிபாட்டிற்கும், பக்தி முயற்சிகளுக்கு தடையின்மை சான்று வழங்கியது.

உலகம் முழுவதும் பரவியிருக்கும் ரோஜா மிஸ்திகா அன்னையின் பக்தியானது திருத்தலத்திற்கு வருகின்ற பக்தர்களை கண்டே உணரமுடிகிறது. இத்திருத்தலத்தை கண்டு தரிசிக்க வாய்ப்பை ஏற்படுத்தி தந்து, திருப்பயணமாக அழைத்துச் சென்ற திரு. ஜான் மற்றும் திருமதி. ஜீலி அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள். இறைவன் அவர்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

**திருப்பயணம் தொடரும்..........**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
# திருப்பாடல்கள்-41-60



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | | | | 4 |
| | 6 | | | | | | | 7 | |
| | | 11 | | | | | 9 | | |
| | | | | | | 12 | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | 13 | | | | | | |
| | | X | | | | | 10 | | |
| | 5 | | | | | | | 8 | |
| 3 | | | | | | | | | 4 |

**வலமிருந்து இடம்**

1) ஏன்னை வெறுப்போர்..................... ஒன்றுகூடி எனனக்கு எதிராய்க் காதோடு காதாய்ப் பேசுகின்றனர். எனக்குத் தீங்கிழைக்கத் திட்டமிடுகின்றனர்.

4) ஆரவார ஒலியிடையே பவனி செல்கின்றார் கடவுள்: எக்காளம் முழங்கிடவே உயரே ஏறுகின்றார் ....................

7) நேர்மையாளர் அதன் கடுமையைக் கண்டு திகிலடைவர்:..............- உன்னை எள்ளி நகையாடிக் கூறுவர்

8) அங்கே ...................... அவர்களை ஆட்கொண்டது: பேறுகாலப் பெண்போல் அவர்கள் துடிதுடித்தனர்.

9) வான்வெளி ..................... நீதியை எடுத்தியம்பும்: ஏனெனில், கடவுள்தாமே நீதிபதியாய் வருகின்றார்!

10) என் விண்ணப்பத்தைக் கேட்டு மறுமொழி அருளும்: என் ..................... என் மன அமைதியைக் குலைத்துவிட்டன.

12) மனிதரை வெறியோடு விழுங்கும் சிங்கங்கள் போன்றவரிடையே நான் கிடக்கின்றேன்: அவர்களின் பற்கள் ஈட்டியும் .................. போன்றவை: அவர்களின் நா கூர்மையான வாள் போன்றது.

**இடமிருந்து வலம்**

2) கடவுளே! என் நேர்மையை நிலைநாட்டும், இறைப்பற்றில்லா இனத்தோடு என் வழக்குக்காக வாதிடும்: ....................... கொடுமையும் நிறைந்த மனிதர் கையினின்று என்னை விடுவித்தருளும்

3) மானிட மைந்தருள் ......................- பெருமகன் நீர்: உம் இதழினின்று அருள்வெள்ளம் பாய்ந்துவரும்: கடவுள் உமக்கு என்றென்றும் ஆசி வழங்குகின்றார்.





வாழ்வாக்க , உலக உறவுகள், உலக செல்வங்கள் , உலக நாட்டங்கள் அனைத்தையும் துறக்க வேண்டும். துறந்தபின் பெறக்கூடிய இன்பங்கள் பல உண்டு என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார் வள்ளுவர்.

‘வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டு இயற்பால பல’

கிறிஸ்துவை முழுமையாக பின்பற்ற இன்றைய முதல் வாசகம் குறிப்பிடும் ஞானம் தேவைப்படுகிறது. இவ்விறை ஞானம் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

ஞானம் இறைவனால் அருளப்படும் அறிவு , அதன் செயலாற்றல் ஆகியவைபற்றி விரிவாக காட்டுகிறது சாலமோனின் ஞானம். சாதாரண மனித ஞானத்தால் இறையுள்ளத்தை மனிதன் அறிந்து கொள்ள முடியாது. ஆனால் இறை ஞானம் கடவுளின் திருவுளத்தை அறிய வழிவகுக்கின்றது. நம் சாதாரண மனித வாழ்வால் அடைய முடியாத இவ்வகை ஞானத்தை, திருமுழுக்கு வழியாக தூய ஆவியைப் பெற்றுக்கொண்டதன் வழியாக இஞ்ஞானத்தை அடைந்துள்ளோம். அவ்விறை ஞானத்தோடு செயல்பட இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

சிறையிலிருந்து பவுல் எழுதிய மடல்களில் மிகவும் சிறிய மடல் இது. இன்றைய இரண்டாம் வசகப் பகுதி பவுலுக்கும் ஒனேசிமுக்கும் உள்ள அன்புறவை விடாத கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவ நெறிதவறிய மக்களுக்கும் உள்ள அன்புறவு சற்று மேலானது என்பதை விளக்குகின்றது. தூய பவுல், கிறிஸ்தவர்களின் முக்கியமான பண்பான அன்பு செய்வது குறித்து தெளிவுபடுத்துகின்றார். கிறிஸ்தவ அன்பு ஒருவரை ஒருவர் இணைக்கும் பாலமாக அமைய வேண்டும். இறைவனின் முன்னிலையில் நாம் அனைவரும் சமம் என்பதை பவுல் விவரிக்கின்றார்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தூய ஆவியின் கொடையாகிய ஞானத்தை தனதாக்கி கொண்டு இறை திருவுளத்தை அறிந்து அதற்கேற்ற வாழ்வை தொட துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, உமது மன்னிப்பையும் இரக்கத்தையும் பெற்றுள்ள நாங்கள் , எங்களது பகைவர்களையும், தீமை செய்பவர்களையும் மன்னித்து அவர்களுக்கு நன்மை செய்து வாழ தேவையான இறையருளை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றறோம்.

3. அன்பின் இறைவா, எங்களது கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் உலக உறவுகளுக்கும், உலக செல்வங்களுக்கும் அடிமையாக வாழாமல் உம்மை மட்டுமே பற்றிக்கொண்டு விண்ணரசை எமதாக்கி கொள்ள துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, நாங்கள் எங்களது அனுதின வாழ்வில், இறை ஞானத்தோடு செயல்படவும் உமது விருப்பத்திற்கு உரிய செயல்களை மட்டுமே செய்ய கூடிய மனநிலையை எம்மில் வளர செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இரண்டாவது வாசகம் முன்னுரை**

விண்ணக எருசலேமாகிய இறைவனின் உறைவிடம் நோக்கி நம் பயணம் தொடர்கிறது. பழமைக்கும் புதுமைக்கும் உள்ள வேறுபாட்டை இன்றைய 2-வது வாசகம் விளக்குகிறது. நாம் பெற்று கொண்ட கடவுளின் அருளை புறக்கணித்துவிடாமல் இருக்கும்படி எச்சரிக்கை விடுக்கிறது இன்றைய வாசகம் மேலும் இயேசுவைச் சீயோன் மலைக்கு ஒப்பிட்டு அவரே உயிருள்ள விண்ணகம் அவரை நோக்கியே நமது கிறிஸ்தவ விசுவாச பயணம் அமைந்திட அழைப்பு விடுக்கும் இவ்விரண்டாம் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தாழ்ச்சி என்ற புண்ணியத்தைக் கொண்ட மக்களாக வாழ்ந்து இறைவனது இரக்கத்தையும், அருளையும் நிறைவாக பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, எம் நாட்டு அரசியல், சமூக, ஆன்மிக தலைவர்கள் Ra ey k;t ṗLj ;J / gpwh;ey k;bf hz  L kf f s pd ;t s hr;r pf f hf  j ங்களை தாங்கள் வருத்திக்கொண்டு பிறரின் வளர்ச்சிக்கு தங்களை அர்பணிக்கின்ற மனவலிமையை அவர்களுக்கு தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, எங்களது கிறிஸ்தவ வாழ்வில் உள்ள எல்லா வேறுபாடுகளையும் களைந்து, ஏழை எளியவர்களுடன் இணைந்து ஒற்றுமையும், சமாதானமும், சகோதரத்துவம் நிறைந்த உலகத்தை படைத்திட துணைபுரிய வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, கிறிஸ்துவை போல வாழ்வில் வரும் சிலுவைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு, அவரிடமிருந்து மனத்தாழ்ச்சியைக் கற்றுக்கொண்டு பிறருக்கு நம்பிக்கை தருகின்ற மனிதர்களாக வாழ தேவையான அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலத்தின் 23 ஆம் ஞாயிறு (07.09.2025)**

**சீரா ஞா 9:13-18  பிலமோன் 19:10, 12-17  லூக் 14:25-33**

**திருப்பலி முன்னுரை**

இயேசுவைப் பின்தொடர்வதில் தடையாயிருக்கும் எதையும் எவரையும் நிராகரிக்காதவன் அவரது சீடராக முடியாது. தனது உயிரையும் இழக்கத் துணிபவனே ஆண்டவரது உண்மையான சீடன்.கோபுரம் கட்டுதல் போருக்கு செல்லுதல் என்ற உவமைகள் வழியாகச் சீடத்துவத்தை பற்றி இன்றைய நற்செய்தி விளக்குகின்றது.

வேத கலாபனை காலத்தில் இயேசுவா வாழ்வா? எதைத் தேர்ந்தெடுப்பது என்ற பிரச்சனை எழுந்தபோது, இயேசுவைத் தேர்ந்தெடுத்து தம் வாழ்தை தியாகம் செய்தவர்கள் இயேசுவின் போதனைகளை ஏற்று, அவரைப் பின்சென்றார்கள் அவரது உண்மையான சீடர்கள், ஊழலும் பொய்யும் புரட்டும் மலிந்துள்ள இன்றைய சமுதாயத்தில் கிறிஸ்தவ நெறியைப் பின்பற்றுவதில் வரும் தொல்லைகளை ஏற்று , நேர்மையான வழியில் நடப்பவன் இயேசவின் சீடர். கிறிஸ்துவைப் பின்செல்வது கடினமானது. உலக மதிப்பீடுகளுக்கு எதிரான போதனையைப் பின்பற்றி வாழ்வது என்பது எளிதான ஒன்று அன்று. கிறிஸ்துவின் போதனைகளை





5) அதன் மதில்களைக் கவனித்துப் பாருங்கள்: அதன் கோட்டைகளைச் சுற்றிப் பாருங்கள்: அப்பொழுது, ......................... தலைமுறைக்கு இதை உங்களால் விவரிக்க இயலும்.
6) கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்: .................... ஆவியை புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும்.
11) உமது பெயரின் வல்லமையால் என்னைக் காப்பாற்றும்: .................... ஆற்றலினால் எனது நேர்மையை நிலைநாட்டும்.
13 கடவுள் தமது தூயகத்தினின்று இவ்வாறு உரைத்தார்: வெற்றிக் களிப்பிடையே செக்கேமைப் பங்கிடுவேன்: சுக்கோத்துப் பள்ளத்தாக்கை .......................- கொடுப்பேன்.

**மேலிருந்து கீழ்**

1)என் நெஞ்சே! நீ நம்பிக்கை இழப்பது ஏன்? நீ கலக்கமுறுவது ஏன்? கடவுளையே நம்பியிரு. என் மீட்பராம் கடவுளை இன்னும் நான் போற்றுவேன். என் கடவுளின் மீட்புச் செயல்களை முன்னிட்டு இன்னும் நான் .......................- நன்றி செலுத்துவேன்.
2) அவர்கள் தங்கள் வாளால் நாட்டை உடைமையாக்கிக் கொள்ளவில்லை: அவர்கள் தங்கள் புயத்தால் வெற்றி பெறவில்லை. நீர் அவர்களில் மகிழ்ச்சியுற்றதால் உமது .......................உமது புயமும் உமது முகத்தின் ஒளியுமே அவர்களுக்கு வெற்றியளித்தன.
6) உங்கள் வாய் .....................- தீமையே: உங்கள் நா புனைவதும் பொய்ம்மையே.
9) நேர்மையாளர் ....................... கடுமையைக் கண்டு திகிலடைவர்: மேலும், உன்னை எள்ளி நகையாடிக் கூறுவர்:
11) நான் உம்மை நோக்கி மன்றாடும் நாளில் என் எதிரிகள் புறமுதுகிட்டு ஓடுவர்: அப்போது, கடவுள் என் பக்கம் இருக்கின்றார் என்பதை நான் ....................... அறிவேன்.
12) ஆகவே, வெகுண்டெழுந்து அவர்களை அழித்துவிடும்: இனி இராதபடி அவர்களை ஒழித்துவிடும்: அப்பொழுது, கடவுள் யாக்கோபின் மரபினரை ஆள்கின்றார் எனவும் ....................... அரசு உலகின் எல்லைவரைக்கும் உள்ளது எனவும் அவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

**கீழ்ருந்து மேல்**

3) ஆறு ஒன்று உண்டு, அதன் கால்வாய்கள் உன்னதரான கடவுளின் திரு உறைவிடமான நகருக்குப் ..................... அளிக்கின்றன
4) இதோ! கடவுள் எனக்குத் துணைவராய் இருக்கின்றார்: என் தலைவர் என் வாழ்வுக்கு ....................... உள்ளோருடன் இருக்கின்றார்:.
5) உண்மையில், தம்மைதாமே மீட்டுக்கொள்ள எவராலும் ....................... தம் உயிரை மீட்க எதையும் கடவளுக்குத் தர இயலாது
8) மக்களினங்களே! ..................... இதைக் கேளுங்கள்: மண்ணுலகில் வாழ்வோரே, யாவரும் செவிகொடுங்கள்.
10) ஏனெனில், என் குற்றங்களை நான் உணர்கின்றேன்: என் பாவம் எப்போதும் என் மனக் .................. நிற்கின்றது.
13) படைகளின் ஆண்டவர் நம்மோடு இருக்கின்றார்: யாக்கோபின் கடவுளே நமக்கு .....................

**விடைகள் அனுப்பவேண்டிய இறுதி நாள்: 25-08-2025**

# மரியாவின் பாடல் 26



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

**விண்ணக அரசியே வாழ்க**

1. பெரியதோர் அதிசயம் வானத்திலே
யோவனவர் கண்டார்தம் ஞானத்திலே
கடவுளவர் அருளினை பேற்றினிலே
கைப்பட எழுதினாராம் ஏட்டினிலே

2. பல்லரும் காட்சிகள் படலத்திலே
சின்னதாய் வடிக்கின்றேன் பாடத்திலே
கர்த்தரின் அன்னையை எண்பிக்கின்ற
கூற்றினை மட்டுமே வர்ணிக்கின்றேன்

3. பேரெழில் கொஞ்சிடும் பெண்மணியாம்
பேர்சொல்ல முடியாத அம்மணியாம்
பேரொளி வீசிடும் முக ஒளியாம்
பேரின்பம் பேசிடும் அக ஒளியாம்

4. கதிரவனே அவர்தம் உடையணியாம்
குளிர்வென் நிலா அவரின் காலணியாம்
பன்னிரு விண்மீன்கள் தலையணியாம்
பலநூறு தூதர்கள் புடையணியாம்

5. வெண்மேகக் கூட்டத்திலே இசைபரப்ப
பெண்தேவதை மாடத்திலே தோன்றினாராம்
வெளிப்பாட்டில் குறிக்கப்பெற்ற அம்மணிதான்
வழிபாட்டில் போற்றுகின்ற அன்னைமரி

6. விண்ணகம் சென்ற அன்னைமரி
மன்னவன் அருகே ஒளிர்கின்றார்
தன்னகம் வாழ்ந்த இயேசுவிடம்
உன்னதம் சூழ்ந்து மிளிர்கின்றா

7. விண்ணக அரசியே வாழ்க
மண்ணவர் புகழ்ச்சியே வாழ்க
நம்மவர் இயேசு கிறிஸ்துவிடம்
எம்மையும் சேர்த்திட பேசிவிடும்





செய்தியை பிறருக்கு அறிவிக்க தேவையான இறையருளை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, உமது மீட்பும் உமது இரக்கமும் உலக மக்கள் அனைவர்க்கும் உரியது என்று உணர்ந்து பிறமக்களையும் எங்கள் சகோதர சகோதரிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களையும் கிறிஸ்துவின் மீட்பின் கருவிகளாக மாற அவர்களுக்கு துணைநிற்க தேவையான இறையருள் வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, பல்வேறு துன்பங்களாலும் வலியாலும் நம்பிக்கை இழந்து வாழ்கின்ற மக்களுக்கு நாங்கள் அவர்களுக்கு நம்பிக்கை தருகின்ற கருவிகளாக மாற்ற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் சந்திக்கின்ற அனைத்து துன்பங்களையும், கஷ்டங்களையும் கண்டு அஞ்சாமல் , தைரியத்தோடும் மன உறுதியோடும் நின்று நேர்மையான மனநிலையோடு சவாலை அணுக தேவையான அருள் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலத்தின் 22 ஆம் ஞாயிறு (31.08.2025)**

**சீரா 3:17-20, 28-29 எபி 12:18-19,22-24 லூக் 14 :1,7-14**

**திருப்பலி முன்னுரை**

தாழ்ச்சியுடையோர் கடவுளால் உயர்த்தப்படுகின்றனர். கடவுளின் மறைபொருளை அறிகின்றார்கள், ஆண்டவரை மாட்சிமைப்படுத்துகின்றார்கள், வாழ்வில் ஒருபோதும் வீழ்வதில்லை. இன்றைய இறைவார்த்தை வழிபாடு தாழ்ச்சியின் அவசியத்தை எடுத்துரைக்கிறது. ஆணவத்தால் வீழ்சியுற்ற உலகைத் தமது தாழ்ச்சியால் உயர்த்திய இயேசு கிறிஸ்துவின் வாழ்வை பின்பற்றி ஏழ்மையும் தாழ்ச்சியோடும் வாழ்ந்து அவரது மாட்சியில் பங்குபெற இன்றைய வழிபாடு நமக்கு அழைப்புவிடுக்கின்றது.

தாழ்ச்சி என்பது உண்மை நிலை. அதாவது நாம் அடையும் வெற்றியைப்பற்றி இறுமாப்புக் கொள்ளாமல், அவ்வெற்றியை நமக்கு கொடுத்த இறைவனுக்கு உகந்த மக்களாக வாழ்ந்து அவருக்கு மகிமை அளிப்பதே உண்மையான தாழ்ச்சியாகும். அகநிலையில் தாழ்ச்சியுள்ளவர்களாக இருந்தால், புறநிலையில் ஏழை எளியவர்களுடனும், பழகுவர், தாழ்ச்சி என்கின்ற உன்னத பண்பை வாழ்வாக்கி இறைவனது இரக்கம் மற்றும் அவரது அருளையும் பெற ஆண்டவர் பார்வையில் மிக உயர்வானவர்களாக வாழ அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசகம் முன்னுரை**

எபிரேய மொழியில் தாழ்ச்சி என்ற சொல்லுக்கு குனிதல் அல்லது பணிதல் என்பது பொருள். தாழ்ச்சி உள்ளவன் தன்னை இறைவனிடம் கையளித்து அவர் விருப்பப்படி நடப்பான் என்கின்றது சீராக் புத்தகம். அவனும் வாழ்வு பெறுவான் என்கிறது முதல் வாசகம். தான் என்ற ஆணவம் கொண்டவர், அனைத்தும் அறிந்தவன் நான் என்ற பேதைமை, பணத்தால் அனைத்தையும் சாதித்து விடலாம் என்ற அகந்தை உள்ளவர்கள் இறைவனால் நிராகரிக்கப்படுவர் என்கிறது இன்றைய வாசகம், எனவே தாழ்ச்சியோடு வாழ்ந்து இறையருள் பெற முயல்வோம்.

**திருப்பலி முன்னுரை**

கடவுளின் இரக்கமும் அவர் தரும் மீட்பும் அனைவர்க்கும் உரியது என்பதை இன்றைய இறை வார்த்தை வழிபாடு நமக்கு உணர்த்துகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் இஸ்ரயேல் இனம். இத்தேர்வை எண்ணி இறுமாப்பு எய்திய அவ்வினம்ம கடவுளின் மீட்பு அவ்வினத்திற்கு மட்டுமே உண்டு என்று எண்ணியது.

ஆனால், மீட்பு என்பது கடவுளின் கொடை எனவும், அம்மீட்பை பெற நாம் உழைக்க வேண்டும் என்ற இன்றைய வாசகங்கள் நமக்கு உணர்த்துகின்றன. இறைவனது மீட்பை நாம் பெறுவதற்கு இடுக்கமான வாயில்வழியாக நுழைய இறைவன் நமக்கு அழைப்புவிடுக்கின்றார். இடுக்கமான வழியே இயேசு சென்ற வழி. அதுதான் சிலுவையின் வழி என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் என்கிறார் இயேசு. நமது வாழ்வில் வரக்கூடிய துன்பங்கள் , நம்மை மேலான வாழ்வுக்கு உயர்ந்த கொடுக்கப்படுபவையேயொழிய நம்மை வீழ்த்துவதற்காகத் தரப்படுபவையல்ல என்பதை உணர்ந்து துன்பங்களை கண்டு நம்பிக்கை இழக்காமல் வாழ இறைவனை வேண்டுவோம். நாம் செருக்குறாதபடியும், கடவுளின் அருளில் நம்பிக்கை வைக்கும்படியும் கடவுள் அத்துன்பங்களை அனுமதித்தார் என்பதைப் பவுல் அடிகளார் போன்று புரிந்து வாழ தேவையான அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசகம் முன்னுரை**

கடவுளின் இரக்கமும் அவர் தரும் மீட்பும் அனைவர்க்கும் உரியது. கடவுள் எல்லா நாடுகளிலிருந்தும் மக்களை ஒன்று சேர்க்க விரும்புகிறார் என்கிறார் எசாயா இறைவாக்கினர். தன்னுடைய எருசலேம் ஆலயத்தில் லேவி குலத்தைச் சாராதவர்களையும் குருவாக நியமிக்கவும் , இஸ்ரயேல் மக்களைப் போல பிற இன மக்களையும் தாம் தோந்துகொள்ளப்பட்டவர்களாக மாற்றப்படுவார்கள் என்பதை எசாயா இறைவாக்கினர் வழியாக கடவுள் கூறுகிறார். நமக்கு இறைவனது மீட்பு உண்டு என்று நம்பிக்கையோடு இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசகம் முன்னுரை**

நமது வாழ்வில் சந்திக்கின்ற துன்பங்களை நேர்மறை மனப்பக்குவத்துடனே நாம் துன்பங்களை அணுக வேண்டும் என்பதை புனித பவுலடியார் இன்றைய இரண்டாம் வாசகத்தில் சுட்டிக் காட்டுகிறார். துன்பங்கள் வழியாக இறைவன் நம்மை கண்டித்துத் திருத்துபவராகவும் அதை வேண்டாம் என்று தள்ளி விடக்கூடாது என்றும் புனித பவுல் கூறுகிறார். எனவே வாழ்க்கையில் உண்டாகும் துன்பங்கள் மூலம் நாம் நற்பயிற்சி பெற்று விசுவாசத்தில் உறுதி பெற அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுகள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும், கிறிஸ்துவின் பாடுகளில் முழுமையாக பங்குபெற்று இறைவனது மீட்பை முழுமையாக பெற அம்மீட்பு





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
ஜெய மாதா பிரயரி. பெங்களூரு.



**பொதுக்காலம் 19 ஆம் ஞாயிறு (10-08-2025)**
**சாஞா 18:6-9; எபி 11:1-2, 8-19; லூக் 12:32-48**

**திருப்பலி முன்னுரை**

வளமையான வாழ்விற்கும், நிறைவான மகிழ்ச்சிக்கும் நம்பிக்கை என்னும் நங்கூரம் அவசியமானது. நம்பிக்கை என்னும் நங்கூரத்தினால் வாழ்க்கை என்னும் கப்பல் நிலைநிறுத்தப்படவில்லை என்றால் வாழ்க்கைக் கப்பல் திசை தெரியாமல் அலைக்கழிக்கப்படுவது உறுதி. இதற்கு மாறாக, ஆழமான நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் வாழ்வில் வெற்றி பெறுகின்றனர். நமது வாழ்விலும் இத்தகைய ஆழமான நம்பிக்கை இருக்க வேண்டும் என்பதே இன்றைய திருவழிபாடு நமக்கு தரும் அழைப்பு. நம்பிக்கையில் நாம் வளர வளர வாழ்வில் வரும் இன்னல்களையும், இடர்பாடுகளையும் மனதைரியத்துடன் சந்திக்கும் மனப்பக்கும் பெறுகின்றோம். நாம் கடவுள் மீது கொண்டுள்ள நம்பிக்கை ஆழமானதாகவும், வோராட்டமானதாகவும் இருந்தால், வாழ்வில் வரும் துன்பங்கள் நம் நம்பிக்கையை அதிகப்படுத்துமேயொழிய அழித்துவிடுவதில்லை. எனவே, ஆபிரகாமைப்போல, எகிப்தில் வாழ்ந்த இஸ்ராயேல் மக்களைப் போல, இயேசுவின் அன்புச் சீடர்களை போல ஆழமான நம்பிக்கை கொண்டு வாழ அழைக்கப்படுகின்றோம்.

நமது நம்பிக்கையின் அடுத்த பரிமாணத்தை இன்றைய நற்செய்தி தெளிவாக விளக்குகின்றது. அதாவது நம்பிக்கை உயிரோட்டம் நிறைந்த, செயல்பாடுள்ள வாழ்வு வாழ்வதற்கான அழைப்பு. எனவே நமது கடமைகளையும், நற்செயல்களையும் செய்து இறைவனர் அன்புக்கு உகந்த பணியாளர்களக வாழ வேண்டிய இறையருள் கேட்டு இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இயேசுவின் பிறப்பிற்கு ஏறத்தாழ 60 அல்லது 70 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த யூதர்களில் ஒரு குழுவினர் பாலஸ்தீனத்திற்கு வெளியே உரோமை அரசின் பல்வேறு பகுதியில் வாழ்ந்து வந்தனர். இவர்களில் பலர் தங்கள் மூதாதையரின் தெய்வமாகிய யாவேயின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை விட்டுவிட்டு பிற இன தெய்வங்களை பின்பற்ற ஆரம்பித்தனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களின் மூதாதையர்கள் எகிப்து நாட்டில் கடவுள் மீது கொண்டிருந்த ஆழமான நம்பிக்கையை சாலமோனின் ஞானம் நூலாசிரியர் அவர்களுக்கு சுட்டிக்காட்டினார். இந்த நம்பிக்கையின் வாயிலாக அவர்கள் கடவுளைப் பெருமைப்படுத்தியது ஒருபுறம் இருக்க, இஸ்ராயேல் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தந்தது இந்த நம்பிக்கை என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

நமது கிறஸ்தவ விசுவாச வாழ்வில் இடையூறு எழும்போது இன்றைய இரண்டாவது வாசகத்தில் வருகின்ற ஆபிரகாமை நம் கண்முன் நிறுத்தி வாழ அழைக்கப்படுகின்றோம். கடவுள் ஆபிரகாமை வேற்று நாட்டுக்குப் போகும்படி பணித்தபோதும், தம் ஒரே மகன் ஈசாக்கை பலியிட ஆண்டவர் கேட்டபோதும், அவர் துணிவுடன் செயல்படுத்த பணிந்தது அவர் இறைவன் மீது கொண்ட ஆழ்ந்த விசுவாசத்தை சுட்டிக்காட்டுகின்றது. ஆபிரகாம் இன்னல்களுக்கு மத்தியில் கடவுள் மீது ஆழமான நம்பிக்கை கொண்டிருந்ததைப் பற்றியும், அதன் பொருட்டு அவருக்குக் கிடைத்த பலன்களைப் பற்றியும் எபிரேய நூலின் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். நாமும் அவரைப் போல ஆழ்ந்த விசுவாசம் கொண்டு வாழ துணை வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம்மில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு அதன் பலனாக இறையருளை நிறைவாகப் பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நம்பிக்கையின் பிறப்பிடமே எம் இறைவா! செயலற்ற விசுவாசம் செத்த விசுவாசம் என்ற உண்மையை உணர்ந்து எங்களது விசுவாசத்தை வாழ்வாக்கி உயிரோட்டமுள்ள கிறிஸ்தவர்களாக வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. மகிழ்ச்சியின் ஊற்றே எம் இறைவா! எந்த சூழ்நிலையிலும் நாங்கள் உம்மை விட்டு விலகிச் செல்லாமல் எப்போதும் உமது வார்த்தையைக் கேட்டு அவ்வார்த்தையை வாழ்வாக்கி அதன் வழியாக உமது இறையரசை இவ்வுலகில் கட்டி எழுப்பும் விழிப்புள்ள பணியாளர்களாக வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. வாழ்வின் ஊற்றே எம் இறைவா! வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளில் உம்மை விட்டு விலகிச் சென்ற சகோதர சகோதரிகள் அனைவரும் வாழ்வின் ஊற்றாகிய உம்மை முழுமையாகத் தங்கள் வாழ்வில் கண்டுபாவிக்கத் தேவையான அருள்வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 20 ஆம் ஞாயிறு (17.08.2025)**

**எரே 38: 4-6 ,8-10 எபி 12:1-4 லூக் 12 :49-53**

**திருப்பலி முன்னுரை**

அன்பார்ந்த இறைமக்களே, கிறிஸ்துவின் சீடத்துவம் என்பது கிறிஸ்துவைப் போல துன்பத்ததைத் தாங்கக் கூடியவர்களாகவும் உண்மையான சமாதானத்தை நிலைநாட்டக் கூடியவர்களாகவும் விளங்குவது. இத்தகைய சீடத்துவ வாழ்வுக்கு இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. கிறிஸ்துவையும் அவரது நற்செய்தியையும் பின்பற்றுவதில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்பதை இன்றைய வாசகங்கள் தெளிவு படுத்துகின்றன. கிறிஸ்துவை போல கிறிஸ்துவினுடைய திரு அவையும் எதிர்க்கப்படும் அடையாளமாக இருக்கிறது. திரு அவை விசுவாசம் மற்றும் ஒழுக்கநெறி ஆகியவற்றில் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கிறது. எடுத்துக்காட்டாக மணமுறிவு, கருச்சிதைவு, கருணைக்கொலை ஆகியவற்றைக் கடுமையாக எதிர்க்கின்றது. இவற்றில் சமரசத்திற்கு இடமில்லை. ஆனால் ஒருசிலர்





திருஅவையின் போதனையை எதிர்த்துப் போர்க்கொடி பிடிக்கின்றனர். அவ்வாறு செய்வது கிறிஸ்துவின் நற்செய்திக்கு எதிரானது. கிறிஸ்தவ விசுவாசிகள் இறைவாக்கு உரைக்கும் பணியையும் செய்ய வேண்டும். அதே நேரத்தில் திரு அவைக்கு உள்ளும் வெளியும் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்ட அவர்களுக்குக் கடமையும் உரிமையும் உண்டு என்பதை இன்றைய வழிபாடு நமக்கு உணர்த்துகிறது. எனவே, துணிவோடும் உறுதியோடும் எவ்வித சமரசம் இன்றி கிறிஸ்தவ வாழ்வு சாட்சிய வாழ்வு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசகம் முன்னுரை**

கி.மு. 7 ம் நூற்றாண்டில் வாழ்ந்த எரேமியா இறைவாக்கினர் அரசர்களுக்கும் மக்களுக்கும் ஆலயத்துக்கும் எதிராகப் பேசினார். அதனால் பல இன்னல்களுக்கு உள்ளானார். மக்கள் அவரைக் கொல்ல முயன்றனர். இருப்பினும் அவர் எதற்கும் அஞ்சவில்லை. ஏனெனில் அவரை இறைவாக்கு உரைக்கும்படி அழைத்த கடவுள் அவரிடம் உடன் இருந்தார். நமது இறைவாக்குப் பணி கடவுளது பணியென்றால் எவராலும் அதை அழிக்க முடியாது. மாறாக அது நமது சொந்தப் பணி என்றால் அது சிதைந்து போவது உறுதி என்ற மன உறுதியோடு இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

மன உறுதியுடன் கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்தும்படி தூண்டுகிற பகுதி இன்றைய வாசகமாக அமைந்துள்ளது. கிறிஸ்தவ வாழ்க்கையை ஒரு போராட்டமாகவும், ஓட்டப்பந்தயமாகவும் வர்ணிக்காது விசுவாச வாழ்க்கைக்கு முன்னோடிகளாக ஆபிரகாம், ஆபேல், ஏனோக், நோவா, மோசே, கெதயோன், சாம்சன், தாவீது முதலிய பல பெரியோர்களைச் சுட்டிக் காட்டிவிட்டு, அனைவர்க்கும் மேலாக கிறிஸ்துவை விசுவாச வாழக்கைக்கு தலை சிறந்த முன்னோடி என்கிறது எபிரேயரின் திருமடல். எனவே கிறிஸ்துவை முன்னிலைப்படுத்தி நமது சீடத்துவ வாழ்வை வாழ வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுகள்**

1 அன்பின் இறைவா , எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் , கிறிஸ்துவை முன்னிலைப்படுத்தி, நமது கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் நிலைத்து நின்று அவரது நற்செய்திக்கு சாட்சிபகர தேவையான இறையருளை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவ வாழ்வை ஏற்றுக்கொண்டு இருக்கின்ற நாங்கள், எண்ணிலாத் துன்பங்களின் நடுவே, எதிர்ப்புகளின் நடுவே துணிவோடு இருந்து உமது வார்த்தையை வாழ்வாக்க வரம் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா கிறிஸ்தவ போதனை மற்றும் அதன் ஒழுக்க நெறிகளை உறுதியோடு கடைபிடித்து எவ்வித சமரசம் கொள்ளாமல் மன உறுதியோடு உமக்கு சான்று பகர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா , உண்மை, நீதி, நேர்மை ஆகிய உன்னத மதிப்பீடுகளின் நிமர்த்தமாக வாழ்ந்து மரித்த அனைத்து ஆன்மாக்களுக்காகவும் நித்திய வாழ்வை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 21 ஆம் ஞாயிறு (24.08.2025)**

**எசா: 66:18-21 எபி: 12:5,7,11-13 லூக் : 13:22-30**